
# திருக்கோயில்

டிசம்பர் 1991

விலை ரூ.3





பைராகிமடம் என வழங்கும் சென்னை அருள்மிகு வேங்கடேசப் பெருமாள் ஆலய மகாசம்ப்ரோட்சண வைபவம் 3-11-91 அன்று மிகச் சிறப்புற நடைபெற்றது. அறநிலையத்துறை ஆணையாளர் **திருமிகு சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.,** அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

முகப்பு
கோயம்பேடு
அருள்மிகு தர்மசம்வர்த்தினி அருட்கோலம்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு மார்கழி டிசம்பர் 1991 விலை ரூ. 3-00 | மணி 12

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்களின் அருள் அனுபவம்
— திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள்

மாண்புமிகு முதல்வரின் மகத்தான திருக்கோவில் திருப்பணிகள்
— கேசவானந்த கிருஷ்ணகுரு

சித்திரபாரதம்
— செவ்வேள்

கந்தவேள் கருணை
— டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ
— கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

திருமருகல் திருத்தலச் சிறப்பு
— புலவர் பொன் சுப்பிரமணியன்

கற்பகவல்லியம்மைப் பதிகம்.
— இராஜகுமாரி பி.ஏ. பி.எல்.

லிங்கபுராணம்
— டாக்டர் இரா. நாகசாமி

வரலாற்றுச் சிறப்புமிக்க திருவரங்கம்
— ப. தனபால் எம்.ஏ. பி.எல்.,

சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயம்
— டாக்டர் எஸ். பத்மநாபன்

விளாப்பழ ஞானம்
— வேளச்சேரி ஞானிகள்

விபூதி, திருமண்ணின் மகிமை
— ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

## அருளாளர்களின்

# அருள் அனுபவம்



திருமந்திரச் செம்மல்
டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்

திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009

(7)



'திருமந்திரச் செம்மல்'
திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.

பல ஆயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் எண்ணற்ற முனிவர்களும், சித்தர்களும் வாழ்ந்திருந்து தங்களுடைய வாழ்க்கையை, எண்ணங்களை, அனுபவங்களை நமது உள்ளங்களிலே அவ்வப்போது தோன்றும் இறைவனைப் பற்றிய சிந்தனைகளுக்கு ஆதாரமாக வைத்து விட்டுச் சென்றார்கள். அவர்களுடைய அனுபவங்களே நம்முடைய ஆன்மீக வேட்கைக்கு தொடர்ந்து வித்திட்டு வருகின்றன. சமுதாயத்தில் மீண்டும் மீண்டும் தோன்றி வரும் நல்ல உள்ளங்கள், பல முனிவர்கள், சித்தர்கள் ஆகியோர்களுடைய இறை உணர்வினை ஏற்றுக் கொண்டு, தமதாக்கி, அந்த இறை உணர்வை மேலும் மேலும் தெளிவுபடுத்தி நம்மைப் போன்ற பாமர மக்களுக்கு உபதேசித்து வந்தும் அதை நாமும் ஏற்றுக் கொண்டும் வந்த காரணத்தால்தான் இன்றும் நம்முடைய வாழ்க்கை நெறிகளும்பண்புகளும் இறை உணர்வுடன் பின்னிக்கொண்டு நிற்கின்றன. ஆகவேதான் தொடர்ந்து ஆன்மீக அனுபவங்களையும், இறை உணர்வையும் நாம் போற்றி வருகின்றோம். அவைகளை நமக்குக் கொடுத்தருளும் முனிவர்களையும், சித்தர்களையும் இறைவனாகவே மதிக்கின்றோம். வணங்குகின்றோம், வழிபடுகின்றோம். இதில் தவறு ஒன்றுமில்லை. முனிவர்களும், சித்தர்களும் அவாவை அறுத்தவர்கள். பாசத்தை விட்டவர்கள், நேசத்தைத் துண்டித்தவர்கள். விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவர்கள். இன்பத்திலும் துன்பத்திலும் நடுநிலை வகிப்பவர்கள். உலகில்வாழும் எல்லா சீவராசிகளும் ஒன்றே என்கிற உண்மையைத் தம்முள் உணர்ந்தவர்கள். விளக்குவதற்கு அரிய ஒரு பரம்பொருள் பல நிலைகளில் இருந்து கொண்டு இந்த பிரபஞ்சத்தைப் படைத்தும், காத்தும், அழித்தும், ஊழிதோர் ஊழிஎண்ணில்லாத உயிர்களை தனது மறைப்புச் சக்தியில் ஆழ்த்தி, அறியாமை என்கின்ற இருளில் வைத்து, உடலுடன் சேர்த்து பல அனுபவங்களைக் கொடுத்தருளி, படிப்படியாக தனது திருவடி நிழலிலே சேர்த்துக் கொள்கின்றது என்கின்ற மாபெரும் உண்மையை அனுபவரீதியாக உணர்ந்தவர்கள், அப்பாலாய், அப்பாலுக்கு அப்பாலாய் நிற்கின்றமாதேவன் நம்முள் அணுவில் அணுவாய் உயிருக்கு உயிராய் ''பாலினில் நீர்போல் நிற்கின்ற நேர்மையை சோராமற் காணும்'' சுகம் அறிந்தவர்கள், நமது முனிவர்களும் சித்தர்களும் ஆவார்கள். அத்தயை பரம்பொருளை பேரன்பு வடிவமாகக் கண்டு, அந்த அன்பே எல்லா உயிர்களிடையே பொதிந்திருக்கின்றதன்மையை உணர்ந்து உயிர்கள்பால் அன்பு செலுத்துவதன் மூலமாகவே இறைவனுடைய திருவடியைச் சேரலாம் என்கின்ற தெளிவையும் தம்முள் பெற்றவர்கள்.

அத்தகைய முனிவர்களும், சித்தர்களும் நமக்கு அருளிச் செய்வது உபதேசமாகும். முனிவர்கள் இதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பது இல்லை. உயிர்களின் பக்குவத்திற்கு ஏற்ப இறைவன் அவைகளுடைய உள்ளங்களிலே இறை உணர்வை பதிக்கின்றான். பல சித்தர்கள் தங்களுடைய வாழ

நாட்களிலே அதிகமாக பேசாத நிலையில் இருந்தவர்கள். ஆயினும் இறைவனை தம் முள் கண்டவர்கள். அவர்களைப் பற்றி பேசும் பொழுது ''பெற்றார் உலகில் பேசாப் பெருமையே'' என்பார் திருமூலர். பக்குவ மடைந்த சீடர்கள் தங்களை நெருங்கும்போது அவர்களுடைய தகுதியை உடனே தெரிந்து கொண்டு தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும் என்கிற நோக்குடன், அந்தச் சீடர்களை ஏற்றுக்கொண்டு, பெரும் கருணை யுடன் அவர்களுக்கு உண்மையை உணர்த்து வார்கள். இதுவே பேரறிவாகும். இந்தப் பேர றிவு ஏட்டிலும் புறத்திலும் எழுதி வைக்கப் பட்ட அறிவு அல்ல. காட்டும் குறியும் கடந்து நிற்கும் பரம்பொருளைப் பற்றிய விளக்கத்தை நூல் அறிவால் மட்டும் பெற இயலாது. அந்த அறிவு அனுபவ ரீதியாக அமைய வேண்டும். அந்த அனுபவத்தை சீடன் பெறுவதற்கான வழிகளை அறிவிப்பவர்கள் இந்த முனிவர் களும் சித்தர்களும் ஆவார்கள். அவர்களுடைய உபதேசம் சீடனுக்கு ஒரு படகு போலப் பயன் படும். வாழ்க்கை என்னும் கடலை கடப்பதற் கான ஆற்றலையும், அறிவையும் இந்தப் பட கானது சீடனுக்குத் தரும். ''திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி; இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு'' என்பார் திருமூலர். படகு கிடைத்தால் மட்டும் போதாது. படகை ஓட்டும் அடிப்படை அறிவு வேண்டும். இதுவே பக்குவம் எனப்படும். பல பிறவிகளில் கிடைக் கும் வினைக்கூட்டங்களின் ஆற்றல்கள் குறைந்த நிலையில் இருவினை ஒப்பு ஏற்படு கிறது. இறைவனுடைய அருள் சீடன் மீது பதியத் தொடங்குகின்றது. அந்த நேரத்தில் தகுந்த குருவும் சீடனுக்குக் கிடைக்கின்றான். அந்தக் குருவினுடைய உபதேச மொழிகள் சீடனுக்குப் படகுபோல உதவி புரிந்து சீடனை வினைக்கடலிலிருந்து மீட்டுச் செல்கின்றன. சீடனுடைய பக்குவமும், குருவினுடைய உப தேசமும் இறைவனுடைய ஒப்பற்ற பெரும் கருணையாலேதான் நடைபெறுகின்றது. அவன் அருளின்றி ஒன்றும் நடைபெறாது.

சனகர் போன்ற முனிவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள், கற்றறிந்தவர்கள், ஆனால், அவர்களுக்கு அனுபவம் வரவில்லை. வேதப்பொருள்களின் உண்மை அவர்களுக்கு விளங்கவில்லை. முழுமுதற் கடவுளின் உருவ மான தட்சிணாமூர்த்தியிடம் வேதப் பொரு ளின் விளக்கத்தைக் கேட்டார்கள். அருள் மேனி தாங்கிய பெருமான் சுட்டு விரலை பெரு விரலோடு சேர்த்துக் காட்டி ஞான முத்திரை யால் உண்மையினை உணர்த்தினார். பெரு விரல் சிவமாகும். சுட்டுவிரல் உயிரைக் குறிக் கின்றது. நடுவிரல், மோதிர விரல், சிறுவிரல் ஆகிய மூன்றுப் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைக் குறிக்கின்றன. தட்சி ணாமூர்த்தி தனது கைக்குறிகளால் சனகாதி நால்வருக்கும் உணர்த்திய பொழுதும் அவர்கள் உணரவில்லை. பின்னர் இறைவன் அவர் களுடைய சிரத்தைத் தீண்டி அவர்களுக்கு தீட்சையை அளித்து உணர வைத்தான். அவர் களுடைய உள்ளத்திலே உண்மையை பதிய வைத்தான். அவர்களும் தட்சிணாமூர்த்தி

## மாண்புமிகு முதல்வரின் மகத்தான திருக்கோயில் திருப்பணிகள்



—கேசவானந்த கிருஷ்ண குரு

''ஊனுடம்பு ஓர் ஆலயம்—அதில்
உள்ளம் பெருங்கோயில்'' தத்துவம்
மானிடர்க்குச் சொல்லச் சித்தரும்—முடி
மன்னரும் கோயிலைப் படைத்தனர்.

கோயிலைப் புனிதமாய் ஆக்கினர்—அன்று
கோயிலில் பக்தியைத் தேக்கினர்.
கோயிலில்லா ஊரைக்கண்டித்தே—முன்னோர்
கோயிலை ஊர்தோறும் கட்டினர்.

சீரோடு பூசை நடந்ததே—கோயில்
திருப்பணி யாவும் நடந்ததே
தேரோடும் வீதியில் தேர் ஓட—எங்கும்
தெய்வீகத் தேனாறு பாய்ந்ததே.

பேறுகளில் பெரும் பேறாகும்—பக்தி
பெற்றிட்டால் முக்தி நமதாகும்
வேறென்ன வேண்டும் பாரிலே—ஞானம்
வந்திட்டால் பேரின்பம் வாழ்விலே.

தாய்க்குலத் திலகம் முனைந்திட்டார்—கோயில்
சொத்துக்கு அரணாக அமைந்திட்டார்
தீகுணத்தோரை யழித்திட்டார்—கோயில்
சீர்திருத் தம்பல செய்திட்டார்.

வாழ்த்திடுவோம் முதலமைச்சரை—வேத
வகுப்புக்கள் தமிழில் அமைத்திட்டார்
தாழ்த்தப் பட்டோருக்கும் விதிப்படி வாய்ப்பு
தந்திடவழி யதில் வகுத்திட்டார்.

ஆலயம் தொழுதிடல் நன்றுகாண்—என்று
அவ்வையும் மொழிந்திட்டார் அன்றே தான்
காலையும் மாலையும் தொழுதிட்டால்—போதும்
கவலைகள் பறந்தோடும் விந்தைதான்.

ஆன்மீகந் தன்னை வளர்த்திடும்—கோயில்
அறிவறம் அன்பை வளர்த்திடும்
வான்போல் மனமும் உயர்ந்திடும்—கோயில்
உயர்ந்திட உயர்ந்திடும் உலகெலாம்.



யிடம் தீட்சையைப் பெற்று தம்மைத்தாமே உணர்ந்து கொண்டு உள்ளொளி பெற்று நிலை பெற நின்றார்கள்.

''அத்தத்தில் உத்தரம் கேட்ட அருந்தவர்
அத்தத்தில் உத்தர மாகும் அருள்மேனி
அத்தத்தி னாலே யணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை யடைந்துநின் றாரே.''

(திருமந்திரம்....2424)

இறைவன் ஒன்றே. உயிர்கள் அநேகம். அநாதியும்கூட. உயிரை கட்டி வைப்பது பாசமாகும். பாசமாவது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களிலும் தங்கும். உயிரைப் போலவே பாசமாகிய தளையும் அநாதித் தன்மை வாய்ந்தது. உயிரை பதியினிடமிருந்து பிரித்து வைப்பது பாசமாகும். நெல்லில் உமி போல, செம்பினில் களிம்பு போல பாசம் உயிருடன் சேர்ந்து நிற்கும். பாசம் உயிரினைப் பற்றி நிற்கும்பொழுது உயிர் மருள் நிலையில் காணப்படுகின்றது. பாசம் என்றுமே உயிரைப் பற்றி நிற்பதால் உயிருக்கு சுதந்திரமான தன்மை கிடையாது. இறைவனோ என்றும் சுதந்திரமாக நிற்பவன். மலங்கள் அற்றவன். மலங்கள் உயிரினை அணுகும். ஆனால், இறைவனை அணுகாது. எனினும், இறைவனுடைய அருளால் மலங்களை தன்னிடமிருந்து நீக்கிக்கொண்டு உயிர் ஒரு சில நேரங்களில் இறைவனை அணுகும் தகுதியைப் பெறுகின்றது. அப்பொழுது உயிரைப் பற்றியுள்ள பாசங்கள் அதனைவிட்டு நீங்கிவிடும். இறைவனுடைய பெரும் கருணையால் முதிர்ச்சி பெற்ற உயிர் பாசங்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு இறைவனுடைய திருவடியைச் சேருகின்றது.

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே''.

(திருமந்திரம்...115)

உயிர் உய்வதற்கான எல்லா வழிகளையும் காண்பிப்பவன் இறைவனே ஆகும். பல பிறவிகளில் உயிர் பல வினைகளைப் புரிந்து அனுபவங்களைப் பெறுகிறது. நன்றே புரிகினும் தீதேபுரிகினும் அனுபவம் அனுபவம்தான். அந்த அனுபவத்தை தொடர்ந்து பல்வேறு அனுபவங்கள் உயிர் பெற்றாக வேண்டும். இதைச் செய்வதற்காக இறைவனுடைய அருள் உயிரை ஐந்து பூதங்களாலான உடலுடன் சேர்க்கின்றது. வினைக்கேற்ப வாழ்வும் கிடைக்கின்றன. அந்த வாழ்வை ஏணியாக வைத்து உயிரானது படிப்படியாக இறைவனுடைய திருவடியைச் சேர முயல வேண்டும். மரம் வைப்பவன் மரத்தைக் காப்பான். இறைவனுடைய திருவடி

நிழல் உயிருக்கு எப்பொழுதும் கிடைத்துக் கொண்டே இருக்கின்றது. உயிரைச் சுற்றி வேலி போல் நிற்கின்றது. குளிர்ச்சிமிக்க திருவடிகள் அவை. இந்தத் திருவடிகளின் தன்மையை, பெருமையை உடலில் காணலாம். ஆனால், வினைகள் உயிரை மருள் நிலையில் அழுத்தி வைப்பதால் உயிருக்கு இறைவனுடைய திருவடிகளை தம்முள் உணர்ந்து கொள்ள இயலவில்லை. திருவடிகளின் குளிர்ச்சி பொருந்திய தன்மையை அறிந்து கொள்வதில்லை. உடலின் வெப்பமான பகுதி ஈசனுடைய அருளாகும். அதுவே சத்திநி பாதம் எனப்படும். இறை அருளை உயிர் பெறும் பொழுது உயிரைப் பற்றியுள்ள களிம்புகள் அழிக்கப்படுகின்றன. அதாவது மும்மலங்களின் வேகம் குறைந்து விடுகின்றது. உயிரானது தனது சொரூப நிலையைப் பெறுகிறது. அதாவது தான் உடலிலிருந்து வேறு பட்டது என்பதை உணருகின்றது. உடல் மீது உள்ள நாட்டம் ஒழிந்து விடுகிறது. ''உண்ணின்று உருக்கி'' என்பார் திருமூலர். இந்த அனுபவத்தை ''பாவியேன் என்னுடைய ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி'' என்று பாடுகிறார் மாணிக்கவாசகப்பெருமான். உயிர் தன்னுடைய உண்மை நிலையில் இறைவனுடைய மாசற்ற ஒளியை தனதாக்கிக் கொண்டு அந்த ஒளியிலே பிரகாசிக்கின்றது. இறைவனுடைய திருத்தாள்களை உயிர்பற்றிக் கொள்கிறது. சுந்தரமூர்த்திப் பெருமான் இத்தகைய அனுபவத்தை சித்தவடமடத்தில் இறைவனுடைய திருவடி தீட்டையால் பெற்றார். மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் இறைவனே குருவாக எழுந்தருளியபோது அவருடைய ஸ்பரிச தீட்சையால் பெற்றார். இத்தகைய ஒப்பற்ற பேற்றினை அருளிச் செய்பவன் இறைவனே ஆகும்.

''விண்ணின்று இழிந்து வினைக்கீடாய்
மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத்தலைக்காவல்முன்வைத்து
உண்ணின்று உருக்கி ஓர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே''.

(திருமந்திரம்....113)

இதையே உணர்த்தும் திருவாசக அடிகளைப் பாருங்கள்:

''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று
வீடுற்றேன்''

உயிர் பாசத்தால் கட்டுண்டு கிடக்கும் போது இறைவனைக் காண்பதில்லை. உயிருடைய கருவிகள் அனைத்தும் உலக விஷயங்களையே பற்றிச் செல்கின்றன. அவ்வாறு செல்லும்பொழுது உயிரினுடைய அறிவுஉலக விஷயங்களின் தன்மையைப் பெறுகிறது. அதாவது உயிரானது தான் சார்ந்தவற்றின் இயல்பையே பெறுகிறது. பளிங்கின் முன் நீல ஒளியை வைத்தால் அது நீல ஒளியைப் பெறுகிறது. வேறொரு ஒளியுடைய பொருளை அதன் முன் வைத்தால் அது அந்தப் பொருளினுடைய ஒளியின் தன்மையைப் பெற்று அந்த ஒளியைச் சாருகிறது. இது நாம் அன்றாடம் காணும் அனுபவமாகும்.

அதேபோல்தான் உயிரும். உயிர் பளிங்கைப் போல. உலக விஷயங்களில் ஈடுபட்டு உயிர் தன் நிலை மறந்து நிற்கும்போது இறைவனுடைய அருளால் உலக விஷயங்கள் உயிரினுடைய கண் பார்வையிலிருந்து நீக்கப்படும் போது சுயசொரூபம் அடைந்து தனக்கு எதிரே உள்ள இறைநிலையைப் பிரதிபலிக்க ஆரம்பிக்கின்றது. பவளம் சிவத்திற்கு உதாரணமாக வைத்தால் பளிங்காகிய உயிரில் பவளமாகிய சிவத்தைப் பதிக்கும்போது பளிங்கு பவளத்தின் தன்மையை அடைகிறது. பவளம் இதுவரை பளிங்கில் பதிக்கப்படாத காரணம் அந்தப் பளிங்கைப் பற்றியுள்ள களிம்புதான். கண்ணாடிக்கு பிரதிபலிக்கும் தன்மை உண்டு. ஆனால், கண்ணாடிப் பரப்பில் மாசு படிந்திருந்தால் அது பிரதிபலிப்பது இல்லை. அவ்வாறே உயிரும் இந்திரிய விஷயங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளபோது தனது உண்மை நிலையை அறியமாட்டாது. மாசை துடைத்தெடுத்துவிட்டால் கண்ணாடி சாதாரணமாக தான் சார்ந்திருந்ததை பிரதிபலிக்கும். பேரருளாளனாகிய இறைவன் நமது இருளை நீக்குகின்றான். மும்மலங்களை அறுக்கின்றான். தனது திருவடி நிழலை நம்முன் வைத்து, உள்ளத்தை உள்ளிருந்து உருக்கி தன்னொளியை உள்ளத்தில் பதிக்கின்றான். அதாவது நமது அகத்தின் கண்களை விழிப்பிக்கின்றான். இந்த அகக்கண்களே அருள் எனப்படும். புறக்கண்களில் ஊன்றிப் பார்த்துபார்த்து அனுபவங்களை சேர்த்து வரும் உயிரானது இறைவனுடைய அருளால் உள்ளொளியை பார்க்க ஆரம்பிக்கின்றது. சீவன் சிவன்எழில் சாரும் தன்மையைப் பெறுகிறது. சிவஞானம் பொலிகிறது. புலன்களின் வேகம் தடுக்கப்படுகிறது. இறை அறிவு பெருகுகிறது. மாணிக்கவாசகர் ''ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து-ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும் கோனாகி நின்றவா'' என்கிறார்.

''களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே''..

(திருமந்திரம்....114)

அருளைப் பொழியும் இறைவன் எங்கேயோ தன்னந்தனியாக நின்று கொண்டு இதைச் செய்யவில்லை. உயிருடன் சேர்ந்து உயிருக்குயிராகவே நிற்கிறான். அவன் உள்ளத்திலேயே குடி கொண்டுள்ளான். ''உள்ளத்துளேதான் கரந்து, எங்கும் நின்றவன்; வள்ளல்தலைவன், மலர்உறை மாதவன்'' என்று திருமந்திரம் கூறுகிறது. இந்த உடம்பாகிய கோவிலிலே நீங்காது குடிகொண்டு மறைந்திருக்கின்றான். அது எப்படியென்றால் மூங்கிலுக்குள் மறைந்து சதா நின்று கொண்

டிருக்கும் தீயைப் போல என்கிறார் திருமூலர். தீயானது மூங்கிலுடன் சேர்ந்தே நிற்கும். அதே போல சிவன் சீவனில் என்றும் தங்கும். மூங்கிலிலிருந்து தீவெளிப்பட வேண்டிய காலத்தில் வெளிப்பட்டு விளங்கும். தக்க நேரத்தில் சீவனும் சிவமாம் தன்மையைப் பெற்று சிவ ஒளியை தன்னுள்ளும், வெளியிலும் பரப்பும். இந்த ஓர் பேற்றினை நல்குவது சிவனாகும். அடர்ந்த காட்டிலே மூங்கிலிலிருந்து தீ எழும்பும்போது சுற்றுப்புறம் ஒளிபெறும். உள்ளத்திலே குடிகொண்டிருக்கும் இறைவன் உயிரின் பக்குவ காலத்தில் சூரியனாக வெளிப்பட்டு மும்மலங்களின் இருளை நீக்குவான். அவன் தாயைவிடச் சிறந்தவன். தாய்க்கு தனது குழந்தையின் மீது அளவற்ற அன்பு உண்டு. அன்பினால் குழந்தையைப் பேணுகின்றாள். குழந்தையை நீராட்டி அழுக்கை நீக்கி குழந்தையை பாலிட்டு வளர்க்கின்றாள். தாய் குழந்தைக்குக் காட்டுவது அன்பை. நீக்குவது குழந்தையின் உடலிலுள்ள புற அழுக்கை. இறைவன் தாயினும் சிறந்தவன். தாய் அன்பினைத் தருகிறாள். இறைவன் பேரருளை வெள்ளமாகப் பொழிகின்றான். தாய் குழந்தையின் புற அழுக்கை நீக்குகின்றாள். இறைவன் தனது அருளால் உயிரின் மும்மலங்களை நீக்கி அமைக்கின்றான். ''நல்லன்பர்க்கு தாயினும் நல்லன் தாழ்சடையோனே'' என்கிறார் திருமூலர். ''தாயினும் சிறந்த தயாவான தத்துவனே'' என்கிறார் மணிவாசகப் பெருமான். ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து; பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி'' என்கிறார் மணிவாசகப்பெருமான். அவனுடைய அருள் மழையை, கருணை வெள்ளத்தை எவ்வாறுதான் விவரிப்பது!

''வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்
தோயம தாய்எழுந் சூரிய னாமே''.

(திருமந்திரம்.. 116)

இறைவனை மாணிக்கவாசகர் தம்முள் முற்றிலும் உணர்ந்தவர். உள்ளும் புறமும் இறைஒளியிலே தங்கிப்பேரின்பம்அடைந்தவர். தனக்கு இறைவன் அருள் செய்து தனது உள்ளத்தின் இருளை நீக்கிய தன்மையைநினைந்து மணிவாசகப் பெருமான் வியப்படைகின்றார். எனது உள்ளத்திலேயே நின்று கொண்டு எனது இருளை நீக்கியதலைவனே! உன்னுடைய பெருமையைப் பற்றி நான் என்ன சொல்லுவது. நீயின்றி உனது அருளின்றி வேறொன்றுமில்லை என்பதை நான் உணரச் செய்துவிட்டாய் அல்லவா? உன்னைத் தவிர வேறொருவரும் இல்லை என்பதை நான் உணர்ந்த உணர்வை பிறர் அறிவார்களா என்று வியந்து கொள்கின்றார். இறைவனும் தானும் இரண்டறக் கலந்த நிலைமையைப் பற்றி மனம் உருகப் பாடுகின்றார்.

''இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று,
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை;
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை; யன்றி யொன்றில்லை;
யாருனை யறியகிற் பாரே!''

திருமூலர் இதை வேறொரு உதாரணத்தாலும் விளக்குகின்றார். கடல் நீருடன் உப்பு கலந்து ஒன்றாய்ச் சேர்ந்து நிற்கிறது. அந்த உப்பை அடையவேண்டுமென்றால் முதலில் கடல் நீரை பாத்தியில் பாய்ச்ச வேண்டும். பின்னர் சூரியனுடைய வெப்பத்தால் நீர் வற்றி உப்பு தோன்றுகிறது. அதாவது, கடல் நீரானது உப்பெனும் வேறுஉருவம் எய்துகிறது. அதே போல உயிர் சிவத்துடன் என்றும் ஒன்றாய் இருப்பதற்கு உரியது. மும்மலங்கள் உயிரைப் பற்றுவது காரணமாக இறைத்தன்மை மறைக்கப்பட்டு சீவன் தனியாக சிவத்திடமிருந்து வேறுபட்டு நிற்கும்நிலையை அடைகிறது. கடல் நீரிலிருந்து வெளிவரும் உப்பை எடுத்து உப்பினால் ஒரு உருவத்தைச் செய்து மீண்டும் கடலில் இட்டால் என்னவாகும்? கடல் நீரில் உப்பு கரைந்து கடல் நீருடன் ஒன்றாகி விடுமல்லவா! அதே போல இறைவனுடைய அருளால் மும்மலங்கள்நீங்கும் பொழுது உயிரும் சிவத்துடன் சேர்ந்து வேறு நில்லாது ஒன்றாகிவிடும். அகண்ட சிவ வியாபகத்தில் சீவ குணங்கள் அடங்கிவிடுகின்றன.

''அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.''

(திருமந்திரம்....136)

இது எவ்வாறு நடைபெறுகிறது? இது இறைவனுடைய அருட்சக்தியால் நடைபெறுகிறது. இறைவனாகிய சூரியன் உள்ளத்திலே எழுந்து அழுக்குகளை நீக்கும்பொழுது ஏற்படுகிறது. சூரியகாந்தக் கல்லைப் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம். பூதக்கண்ணாடி என்று எடுத்துக் கொள்ளலாம். சாதாரண நேரத்தில் சூரியகாந்தக் கல்லை உபயோகப் படுத்தி பொருட்களைப் பெரிதாகப் பார்ப்பதற்கு பயன்படுத்திக் கொள்கின்றோம். அத்துடன் சூரியகாந்தக் கல்லினால் வேறு பயனும் உண்டு. திறந்தவெளியில் பஞ்சை வைத்து சூரியகாந்தக் கல்லை சூரியனுக்கும் அந்தப் பஞ்சிற்கும் இடையே வைத்துக் காண்பித்தால் சூரியகாந்தக் கல் வழியாகப் பாயும் சூரிய கிரகணங்கள் அந்தப் பஞ்சை சுட்டெரித்து விடும். சூரிய ஒளி இல்லாத நேரத்தில் சூரிய காந்தக் கல்லை இவ்வாறு பயன்படுத்த முடியாது. பஞ்சும் அத்தகைய சூரியகாந்தக் கல்லினால் சுடப்படாது. இரண்டுக்கும் நடுவே சூரியன்தேவைப்படுகின்றது. சூரியனுடைய சந்நிதியிலே சூரியகாந்தக் கல் பஞ்சை எரித்து விடுகின்றது.

—தொடரும்.


சித்திர பாரதம் - செவ்வேள்
படம் M.N.ராஜா
தேவலோகம் திரும்பும் வழியில் பொன்மதில்கள் சூழ பொன்மயமான மாட மாளிகைகளைக் கொண்டு விளங்கும் ஓரூரை அந்தரத்தில் கண்டு அதிசயிக்கிறான் அருச்சுனன்.
"மாதலி! இது என்ன ஊர்? இங்கு யார் வாழ்கிறார்கள்."?
அறுபதினாயிரம் காலகேய அரக்கர்கள் வாழும் இரணியபுரம் தான் இது. இவர்களும் தேவர்களுக்குப் பகைவர்களே!
திரிபுரம் போல ஆகாயத்திலே பறந்து செல்லக் கூடிய இவ்வூரையும், தேவர்களால் வெல்ல முடியாத வரத்தையும் இவ்வரக்கர்கள் பிரம்மாவிடம் வரமாகப் பெற்றிருப்பதால், இந்திரனால் இவர்களை வெல்ல முடியவில்லை!"
அருச்சுனன் காலகேயர்களையும் வெற்றி கொள்ள எண்ணம் கொள்கிறான் "மாதலி! தேரினை இரணியபுரத்திற்குச் செலுத்து!" என்றான். அங்கு சென்றதும், அருச்சுனன் எழுப்பும் காண்டீபத்தின் நாணொலி இடிபோல் முழங்க, ஊழிக்காலத்துக் கடல் பொங்கும் ஒலி தானோ இது என ஐயுறுகிறார்கள் காலகேயர்கள்.
கழுகுகள், யானைகள், சிங்கங்கள் பூட்டிய தேர்களில் ஏறி அருச்சுனனோடு அறுபதினாயிரம் காலகேயர்களும் போருக்கு வருகிறார்கள்.
"பூவுலகை நாங்கள் புழு என்றே மதிப்போம். புலியைக் கண்ட புள்ளி மான்கள் போல தேவர்களே எங்களைக் கண்டு அஞ்சி ஒளிவார்கள் என்றால் அற்ப மானிடன் நீயா எங்களை எதிர்ப்பது?" என்று அருச்சுனனை நோக்கிக் கறுவுகிறார்கள் காலகேயர்கள்.


ஆலகாலம் போன்ற கொடிய அம்புகளையும், வேல்களையும், சூலங்களையும், சக்கரங்களையும் காலகேயர்கள் அருச்சுனன் மேல் செலுத்த... அட்டதிக்குகளும் அஞ்சுமாறு வந்த அரக்கர்களின் ஆயுதங்களை அம்பு மழை பொழிந்து தடுத்து விடுகிறான் அருச்சுனன். அருச்சுனன் ஏவும் அளவிலாக் கணைகள் அரக்கர்களின் மார்புகளை
ஊடுருவ அருச்சுனன் தேருக்கு நான்றும்
பின்னும், ஆகாயத்திலுமாகத் தேருடன் மறைந்து இந்திரஜாலம் புரிகிறார்கள் அரக்கர்கள். அருச்சுனன் இறுதியில் சிவபெருமானைத் தியானித்து பாசுபதாஸ்திரத்தை ஏவுகிறான்.
முந்தலைகளையுடைய பாசுபதாஸ்திரம் ஒன்றே அறுபதினாயிரம் அம்புகள் ஆகி காலகேயர்கள் அனைவருடைய தலைகளையும் சிதறடிக்கிறது. இரணியபுரமும் மறைந்தொழிகிறது.
அருச்சுனன் வீரம் மெச்சி, அவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கிப் போற்றுகிறான் மாதலி. அமராவதியை அலங்காரம் செய்து, தேவர்கள் புடை சூழ வரவேற்று அருச்சுனனை ஐராவத யானையின் மேல் ஊர்வலம் செய்விக்கிறான் தேவேந்திரன்.
பூவுலகம் சென்று தருமரைப் பணிய வேண்டும் விடை தாருங்கள் தந்தையே!
சில நாட்களேனும் என் விருந்துபசாரம் ஏற்றுப் பிறகுதான் நீ செல்ல வேண்டும்.
உரோமச முனிவரே! தருமரிடம் சென்று அருச்சுனன் வெற்றிச் சிறப்பெல்லாம் கூறி, விரைவில் வருவான் என்று கூறுங்கள்.
அப்படியே ஆகட்டும் தேவேந்திரா!

# கந்தவேள் கருணை



டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

## [47]

சக்கரவாகப் பறவை வெட்டி வீழ்த்தப் பட்டதும், சூரபன்மன் அண்ட முகட்டை உரசும் உயரத்துக்கு மண்வடிவாக உருமாறினான். ஏழுகடல்களையும் வற்றச் செய்து கதிரவன் செல்லும் வழியையும் மறைத்தான். திக்குகளையெல்லாம் மூடினான். முருகக் கடவுள் ஏழு பாணங்களை விடுத்தார். அவை ஏழு கடல்களாகச் சென்று சூரபன்மனின் அம்மாய உருவை அழித்துக் கடல் வடிவம் மாறி முருகக் கடவுளை வந்தடைந்தன. சூரபன்மன் தண்ணீர் வடிவாகி விண்ணுலகத்தைத் தொடும் வண்ணம் எழுந்து நின்றான். முருகப் பெருமான் நூறு பாணங்களை விடுத்தார். அவை ஊழித் தீயின் வடிவம் எடுத்து நீரை உண்டு திரும்பின. சூரபன்மன் அனல் வடிவமாக அண்டங்களெல்லாம் தீயுமாறு வந்தான். எம்பெருமான் ஆயிரம் கணைகளை விடுத்தார். அவை பெருங்காற்று வடிவங்கொண்டு சூரபன்மனின் மாய அக்னியை அழித்து எம்பெருமானிடம் திரும்பி வந்து சேர்ந்தன. சூரபன்மன் சூறாவளியாகி மலைகள் பஞ்சுபோல பறக்கும்படி ஆர்த்து நின்றான். ஆறுமுகக் கடவுள் இலட்டம் பாணங்களைவிடுத்தார். அவை பாம்பு வடிவாய்ச் சென்று சூரனின் புது வடிவை விழுங்கி மீண்டன. (பாம்புகள் காற்றைப் புசிக்கும் என்பது ஒரு நம்பிக்கை.)

சூரபன்மன் நான்கு நாட்கள் வரையும் தொலையாது நின்று பலப்பல உருவங்களில் முருகப் பெருமானுடன் போர் புரிந்தான். மும்மூர்த்திகள் போல் வந்தான். இந்திரன் போன்று வந்தான். இயமனைப் போன்று வந்தான். பேயைப் போன்று வந்தான்; கடல் போன்று வந்தான்; முகில் போன்று வந்தான்; இடிபோன்று வந்தான்; நாகங்களாக வந்தான்; நஞ்சுபோல் வந்தான். மலைபோல் வந்தான்; சூரியனைப் போன்று வந்தான்; திக்கஜங்கள் போன்று வந்தான்; சிங்கம்போன்று வந்தான்; தாரகாசுரனைப் போன்று வந்தான்; பானுகோபனைப் போல் வந்தான்; அக்கினி முகாசுரனைப் போன்று வந்தான்; தருமகோபனைப் போல வந்தான்; இவ்வாறாக மாயமாகப் பற்பல உருவங்களை யெடுத்த சூரபன்மன் யாண்டும் நிறைந்த முருகப்பெருமானை சூழ்ந்தான். இவ்வற்புதத்தைக் கண்ட தேவர்கள் மூலைக்கொருவராய் அஞ்சியோடினார்கள். ''பாணங்களே! நீங்கள் சென்று சூரபன்மன் மாயங்கள் அனைத்தையும் அழித்து வாருங்கள்' என்று ஆறுமுகக் கடவுள் ஆயிரங்கோடி பாணங்களை விடுத்தார். அவை சூரபன்மன் எடுத்த ஒவ்வொரு வடிவத்துக்கும் தனித்தனியே ஏழு மடங்கு வடிவம் எடுத்து மாய வேஷங்களையெல்லாம் அடியோடு அழித்து மீண்டன.

மாய வேஷங்கள் யாவும் தீர்ந்த பின் சூரபன்மன் போர்க்களத்தில் பெருங்கோபத்துடன் தனித்து நின்றான்.

முருகப் பெருமான் விசுவரூபத்தைச் சூரபன்மனுக்குக் காட்டியருளினார். அதனைப் பார்ப்பதற்குரிய ஞானக்கண்ணையும் சூரனுக்குத் தந்தார்.

''வெம்புயல் இடையில் தோன்றி
விளிந்திடும் மின்னு வென்ன
இம்பரில் எமது முன்னம்
எல்லையில் உருவங் கொண்டாய்
அம்பினில் அவற்றை யெல்லாம்
அட்டனம் அழிவிலாத
நம்பெரு வடிவம் கொள்வம்
நன்றுகண் டிடுதி யென்றான்.'

மேகத்தின் நடுவில் தோன்றி மறைகின்ற வெம்மையான மின்னலைப் போல், இங்கு எமது முன்நீ பலப்பல வடிவங்களைக் கொண்டனை; நாம் அம்பினால் அவற்றையெல்லாம் அழித்து விட்டோம். இனி நமது அழிவிலாத திருப்பெரு வடிவத்தைக் கொள்வோம்; நன்கு பார்ப்பாயாக! என்று கூறினார்.

முருகப் பெருமான் விசுவரூபம் எடுத்த போது கடல், உலகம், திசை, அண்டம், தேவர்கள், உயிர்கள் யாவும் அவரது திருமேனியில் அடங்கின. அந்தத் திருமேனியின் உள்ளடியில் மலைகளும், புறவடியில் கடல்களும், பாத விரல்களில் இடியும், நட்சத்திரங்களும், சிகரங்களும் அடங்கியிருந்தன. பரட்டில் வருணனும், குபேரனும், நிருதி அரக்கர்களும், கணைக் கால்களில் முனிவர்களும்சிந்தாமணி முதலிய மணிகளும் அடங்கியிருந்தன. முழந்தாளில் வித்தியாதரர் முதலியவர்களும், தொடையில் இந்திரனும், சயந்தனும், தொடை மூலத்தில் இயமனும், காலனும் அடங்கியிருந்தனர். அரையின் முற்பக்கத்தில் அசுரர்களும், விலாப் புறங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாதங்களும், குறியில் அமிர்தமும், நாபியில் உயிர் வர்க்கங்களும், மார்பில் சர்வ கலைகளும், உபவீதத்தில் ஞானமும் அடங்கியிருந்ததைக் கண்டான் சூரபன்மன். உரோமத்தில் அண்டங்களும், அங்கையில் சகல போகங்களும் அடங்கியிருந்தன. தோள்களில் திருமாலும், பிரமனும் அடங்கினர். கைவிரல்களில் தெய்வப் பெண்



களும், கண்டத்தில் ஒலியின் கூட்டங்களும், அக்கினியும், வாயில் வேதங்களும்; பற்களில் அட்சரங்களும், நாவில் சிவாகமங்களும், உதட்டில் ஏழு கோடி மகா மந்திரங்களும், நாசியில் வாயுவும், கண்களில் சூரிய சந்திரர்களும், காதுகளில் திக்குகளும் அடங்கியிருந்தன. நெற்றியில் பிரணவமும், தலையில் பரமசிவமும், பொருந்தித் தோன்றியதும், அந்தக் கோடி சூரியர்கள் ஒருங்கே கூடினாற்போல் பேரொளியுடன் கூடியதுமான ஒப்பற்ற விசுவரூபத்தைக் கண்டதும் சூபன்மனின் அறிவு தெளிந்தது. அவன் பெரும் வியப்புற்றான்.

முருகப் பெருமானின் விசுவரூபத்தைக் கண்டதேவர்கள், அத் திருவுருவத்தைக் கண்டு அஞ்சி நடுங்கினார்கள். ஆறுமுகக் கடவுள் தமது திருக்கரத்தை அசைத்து, ''அஞ்ச வேண்டாம்; அஞ்சவேண்டாம்'' என்று திருவருள் புரிந்தார்.

''செஞ்சுடர் அநந்தகோடி
செறிந்தொருங் குதித்த தென்ன
விஞ்சிய கதிர்கான் றுள்ள
வியன்பெரு வடிவை நோக்கி
நெஞ்சகந் துளங்கி விண்ணோர்
நின்றனர் நின்ற மூர்த்தி
அஞ்சல்மின் அஞ்சல்மின் என்
றருளினன் அமைத்த கையான்''.

''அண்டர்கள் யாரும் எந்தை
அருள்முறை வினவி யுள்ளம்
தண்டிடும் விதர்ப்பு நீங்கி
உவகையால் தொழுது நின்றார்
உண்டுளி வரைய தென்னத்
தணப்பறச் சிதறும் ஊழிக்
கொண்டலின் தோற்றம் நோக்கிக்
குலவுறு மஞ்ஞையே போல்.''

தேவர்கள் யாவரும் எமது பரம பிதாவின் அருள்வாக்கைக் கேட்டு நடுக்கம் நீங்கி மலை போன்ற பெரிய துளிகளை இடையறாது சொரியும் ஊழிக்காலத்து மேகத்தின் வரவை நோக்கி மகிழும் மயில்களைப்போல் மகிழ்ச்சியுற்று வணங்கிநின்றார்கள்.

விசுவரூபத்தைக் கண்டு வியப்படைந்த சூரபன்மனுக்கு எம்பெருமான்சிறிது நல்லுணர்ச்சி தந்தருளினார். நல்லுணர்வு பெற்ற சூரபன்மன்,

''எண்ணிலா அவுணர் தானை
யாவையும் இமைப்பில் சென்று
விண்ணுலா அண்டந் தோறும்
வியன்சமர் ஆற்றி என்பால்
நண்ணினார் தம்மை எல்லாம்
நாமறக்கடிந்து வீட்டி
வண்ணமான் தேரும் மீண்டும்
வராநெறி தடுத்தான் மன்னோ.''

கணக்கில்லாத அசுர சேனைகள் முழுவதையும் இவர் இமைப்பொழுதில் அழித்து ஆகாயத்திலே உலாவுகின்ற அண்டங்கள் தோறும் வந்து வந்து என்னுடன் பெரிய போரைச் செய்து என்னுடன் சேர்ந்த வீரர்களை யெல்லாம் முற்றும் அழித்து, இந்திர ஞாலத் தேரையும் என்பால் மீண்டும் வராமல் தடுத்துவிட்டனர்.

''திண்டிற லுடையேன் தூண்டும்
திறற்படை யாவும் நீக்கிக்
கொண்டவென் மாய முற்றும்
கொடுஞ்சரம் அதனால் மாற்றி
அண்டமும் புவனம் யாவும்
அமரரும் பிறவுந் தன்னால்
கண்டிடும் வடிவம் ஒன்று
காட்டியென் கண்முன் நின்றான்.''

மிகுந்த வலிமையுடைய யான் விடுத்த ஆற்றலுடைய படைக்கலங்கள் அனைத்தையும் அழித்து, நான் கொண்ட மாய வடிவங்களையெல்லாம் கொடிய கணையால் மாற்றி எல்லா அண்டங்களும் புவனங்களும் தேவர்களும் பிறவும் தம்மிடத்தையே ஒடுங்கித் தோன்றுகின்ற ஒரு பெரு வடிவினைக் காட்டி இவர் என் கண்முன் நிற்கின்றார் என்று நினைத்தான்.

''முருகனைப் பாலன் என்று இகழ்ந்தேனே என நொந்து கொண்டான். முருகப்பெருமான் தேவர்க்கும் மூவர்க்கும் முதலாய் நின்ற முழு முதற் பொருள் என்ற உணர்ச்சி உண்டாகியது.

''கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலன் என் றிருந்தேன் அந்நாள் பரிசினை உணர்ந்திலேனால்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ!''

தூதுவனாக அன்று வந்த வீரவாகு என்பவர் ஒப்பற்ற வேலாயுதமேந்திய இவரை வேண்டுதல் வேண்டாமையிலாத பராபர முதல்வன் என்று கூறினார். அவர் கூறியவைகளை நான் உறுதி என்று அப்பொழுது கொண்டிலேன்; இப்பொழுது இவரே யாவர்க்குந் தலைவர் என்பதுஉண்மை என்று தெளிந்தேன்.

''ஒற்றென முன்னம் வந்தோன்
ஒருதனி வேலோன் தன்னைப்
பற்றிகல் இன்றி நின்ற
பராபர முதல்வன் என்றே
சொற்றனன் சொற்ற எல்லாம்
துணிபெனக் கொண்டி லேனால்
இற்றைஇப் பொழுதில் ஈசன்
இவ என்னுந் தன்மை கண்டேன்.''

''மீயுயர் வடிவங் கொண்டு மேவிய தூதன் சொற்ற
வாய்மைகள் சரதம் அம்மா மற்றியான் பெற்ற அண்டம்
ஆயவை முழுதும் மற்றும அறுமுகம் படைத்த செம்மல்
தூயபொற் பதரோமத்தில் தோன்றியே நிற்கும் அன்றே''

மிக உயர்ந்த வடிவத்தைக் கொண்டு நம்மிடத்து வந்த அத்தூதுவன் சொன்ன சொற்கள் உண்மையானவை; நான் பெற்றுக் கொண்ட அண்டங்கள் யாவும் ஆறுமுகப் பெருமானுடையதூய அழகிய திருவடியிலுள்ள ஒரு உரோமத்திலே தோன்றி நிற்கின்றன.

''அண்டர்கள் முனிவரேனோர் அகிலமும் காட்டியண்ணல்
கொண்டிடு படிவமுற்றுங் குறித்தியார் தெரிதற்பாலார்
எண்டரு விழிகள் யாக்கை எங்கணும் படைத்தோர்க்கேனும்
கண்டிட அநந்தகோடிகற்பமும்கடக்கு மன்றே''

தேவர்களையும் முனிவர்களையும் பிறரையும் மற்றை எல்லாப் பொருள்களையும் காட்டி இப்பெருமான் கொண்ட வடிவம் முழுவதையும் குறித்து அறியவல்லார் யாவர்? உடம்பெல்லாம் சிறந்தகண்களை யுடையவர்களுக்கும் இத்திருவடிவினைக்காண அநந்தகோடி கற்பகாலத்துக்கு மேலாகும்.

''நேரில னாகிஈண்டே நின்றிடு முதல்வன் நீடும்
பேருரு வதனை நோக்கிப் பெரிதும் கறுவுவ தல்லால்
ஆரிது நின்று காண்பார் அமரரில் அழிவி லாத
சீரிய வரங்கொண் டுளேன் ஆதலின்தெரிகி றேனால்.''

சமானமில்லாதவராகி இங்கு எழுந்தருளியுள்ள முதல்வருடைய நீண்ட பெரிய திருவுருவத்தை நோக்கி அஞ்சுவதை யன்றி தேவர்களிலும் காணவல்லவர் யாவர்? நான் அழியாத வரம் பெற்றுள்ளேன்; ஆதலின் நின்று காண்கின்றேன்.

முருகப் பெருமானுடைய பெருமையை நினைந்து வியப்புற்று, முருகப் பெருமானின் அழகில் பரவசமடைந்தான் சூரபன்மன்.

முருகப் பெருமான் ஞானக் காட்சி தந்தருளியது தவப்பயன் என்று புகழ்ந்து கொண்டான். ''விசுவ ரூபத்தில் உள்ள ஒளியும் சீரும் இளமையும், அழகும் ஆகிய இவைகளெல்லாம் உலகில் வேறு யாரிடத்தில் உள்ளன? ஆகா! அற்புதத்தோடு பலகால் பார்க்கினும் இன்னும் என் பார்வையும் தெவிட்டவில்லையே! சமானமில்லாத இத்தனிப்பெருங்கடவுளுடைய விசுவரூபத்தை நோக்கி மிகவும் அஞ்சுவதன்றி தேவர்களுக்குள்ளும் இதனைக் காண வல்லார் யார்? நான் அழியாத சிறந்த வரத்தைப் பெற்றுள்ளேன். ஆதலால்தான் காண்கின்றேன். நான் மன்மதனைப் பார்த்திருக்கிறேன். அவன் மிகுந்த அழகன் என்று எனக்குத் தெரியும். அவன் எரிந்துவிட்டான். இவரது விசுவரூபத்தில் நான் ஆயிரங்கோடி மன்மதர்களைப் பார்க்கின்றேன்.

''ஆயிர கோடிகாமர் அழகெலாந் திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் எழிலுக்காற்றா தென்றிடில் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்?''

'மன்மதன் கருவேள்; இவரோ செவ்வேள். ஆயிரங்கோடி மன்மதர்களின் அழகைத் திரட்டி உருட்டியெடுத்தாலும் அது முருகப் பெருமானின் பாத நுனியில் தங்கும் அழகுக்கு ஈடாகாது' என எண்ணினான்.

''இங்கென துயிர்போல் உற்ற இளவலும் இளைய சேயும்
செங்கையில் வேலோன் தன்னைச் சிறுவன்என் றெண்ணல் கண்டாய்
இங்கயன் முதலோர் காணாப் பரமனே யாகும் என்றார்
அங்கவர் மொழிந்த வாறும் சரதமே ஆன தன்றே.''

இவ்வுலகில் எனது உயிர் போன்ற தம்பியாகிய சிங்கமுகனும், இளைய மகனாகிய இரணியனும் 'வேற்படை யேந்திய முருக வேளைச் சிறுவன் என்று எண்ணாதே. பிரமாதி தேவர்களும் காணாத பரசிவமே'' என்று கூறினார்கள். அவர்கள் கூறியதும் உண்மையே ஆயிற்று.

சூரபன்மன் விம்மிதமடைந்தான். அந்தக் காட்சியைக் கோடிக்கணக்கான யுகங்கள் பார்த்தாலும் அவனது மனம் அடங்காது போன்றிருந்தது.

(சூரபன்மன் யுத்தத்தில் சரணாகதி செய்யவில்லை. வீரலட்சணத்துக் கேற்றபடி உறுதியாகப் போர் புரிந்து வேறு விதத்தில் சரணாகதி செய்து பேறு பெற்றான்; போர் முடிவில் அவன் அழியவில்லை. சேவலும்மயிலுமாக ஆக வேண்டும் என்று பண்டைக் காலத்தில் தவம் செய்தவன் சூரபன்மன். அத்தவம் நிறைவு பெறுவதற்கே சூர வடிவம் நீங்கி ஐயன் கை ஆயுதம் பட்டுச் சேவலும் மயிலுமாவதற்கே அவன் இனி போர் புரியப் போகிறான்.)

முருகப் பெருமானின் விசுவரூபத்தைக் கண்ட சூரபன்மன் சினம் தணிந்தது. உரோமங்கள் பொடிந்தன. கண்ணீர் பெருகியது; எலும்பு உருகியது; அன்பு பெருகியது. அகந்தை நீங்கி ஞானம் உண்டாகியது. சேமத்தைக் குறிக்கும் வகையில் அவனது வலப் புயமும் வலக் கண்ணும் துடித்தன. 'இது நான் செய்த தவப் பயனேயாகும்' என்று எண்ணிப் பெருமிதம் கொண்டான். ''அருட்கடலாகிய எம் பெருமான் என் மீது போருக்கு வந்திருக்கிறாரே. அதற்கு என்ன நோக்கம் இருக்க முடியும்? இந்த மூடனுக்கு அருள் புரிய வேண்டும் என்ற கருணையினால் வந்திருக்கிறார்'' என்று எண்ணினான். 'நான் மிகுந்த பாக்கியசாலி. பரம்பொருளை நேருக்கு நேர் பார்த்த நான் சாதாரணமானவனா?' என்று இறும்பூது எய்தினான்.

கந்தப் பெருமானை தொழுதிட வேண்டும் என்று எண்ணினான் சூரபன்மன். அவன் மான நோக்கு அவனை முருகவேளைத் தொழவிடாமல் தடுத்துவிட்டது.

'சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல், வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்கா ளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.''
(தாலு— நாக்கு)

தான் தேவர்களை எல்லாம் சிறை வைத்தது தவறு என்று அனைவரும் இடித்துரைத்தனரே! அவர்கள் பேச்சை நான் கேளாததும் நன்மைக்குத்தான். இல்லாவிடில் என்னுடன் போரிடப் பரமன் வருவானோ, அகிலாண்ட ரூபஅமுத தரிசனம் தருவானோ என்று எண்ணினான் சூரபன்மன்.

''ஏதமில் அமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர் அன்னதன் செயற்கையாலே
வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணா
நாதன்இங் கணுகப் பெற்றேன் நன்றதே ஆனதன்றே.''

அசுரர் தலைவனான சூரபன்மன் அமரர்களுக்குச் செய்த தீங்கு இப்பொழுது நன்மையாகிவிட்டது.

''ஒன்றொரு முதல்வனாகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினில் தளரேல் அம்மா,
நன்றி தோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றும்இப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்பதுண்டோ''.

தனி முதல் தலைவராகிய முருகப் பெருமானுடன் இதுகாறும் போர் செய்தேன். இனி நெஞ்சம் தளரமாட்டேன். முருகப் பெருமானுடன் போர் செய்தேன் என்ற பொன்றாப் புகழ் எனக்கு என்றும் இருக்கும் என்று எண்ணினான் சூரபன்மன். ஆதலால் அவன் எம் பெருமானை வணங்கவில்லை.

—(தொடரும்)

# ஆடல் காணீரோ... திருவிளையாடல் காணீரோ...



கம்பன் கவிநயமணி

## வே. தியாகராஜன்

## (14)

குழந்தையின் சைவவேட வடிவுகொண்ட தன்மையைப் பார்த்து மேலும் கோபமடைந்த அவர்கள், ''எலும்பு மாலை அணிந்து சுடு காட்டில்வாழும் சிவனுக்கு அனபு பூண்டவன் மகனுக்கு அன்பு காட்டினாய். நீ எமக்கு வேண்டாம்'' எனக் குழந்தையுடன் அவளைவீட்டை விட்டுத் துரத்தினார்கள். அனாதையாகத் தோன்றிய அக்குழந்தையை கையிலெடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியில் போன கௌரி கண்ணீர்விட்டு, சோமசுந்தரப் பெருமானை நினைத்து கௌரி மந்திரத்தை செபம் செய்தபோது, காளை வாகனத்தில் அம்மையுடன் தோன்றிய இறைவன், கௌரியை பார்வதியின் வடிவமாக தன்னுடன் சேர்த்துக் கொண்டார்.

இவ்வழகிய திருக்கதையை பெரியோர்கள் நன்கு அனுபவித்துள்ளனர். ''பாலனாகவும், விருத்தனாகவும் குமாரனாகவும் நீ தோன்றியதைஎல்லோரும் பாடிப்பரவுகின்றனர். நானும் அதே மாதிரிதான் குழந்தையாகவும் குமாரனாகவும் கிழத்தன்மை உள்ளவனாகவும் பலமுறை தோன்றினேன். என்னை யாரும் லட்சியம் செய்யவில்லையே?'' என வேடிக்கையாகப் பாடுகின்றார் மதுரைக் கலம்பகத்திலே நம் ஸ்ரீகுமர குருபர முனிவர். ஒரு நாய் மனிதனைக் கடித்தால் அது செய்தியன்று. ஆனால், ஒரு மனிதன் நாயைக் கடித்தால் அது செய்தி. அதுபோல, குழந்தையாகப் பிறந்து குமரனாக வளர்ந்து கிழவனாவது புதுமை இல்லை. கிழவன் குமரனாக மாறி குழந்தையாவது புதுமையன்றோ?

''வால விருத்த குமார னெனச்சில
வடிவு கொண்டு நின்றாயென்று வம்பிலே
ஞால நின்னை வியக்கு நயக்குமென்
நடனங் கண்டும் வியலாமை என்சொல்கேன்!
பால லோசன! பானுலோசன!
பற்ப லோசன! பக்தசகாய! மா
காலகால! திரிசூல! கபாலவே
கம்ப! சாம்ப! கடம்பவனேசனே!''

செந்தமிழ்ச் செல்வரான நம் முனிவர் பெருமானின் மேற்கண்ட செய்யுளிலே வடமொழிச் சொற்கள் விரவி கலந்து வந்துள்ளமை அவருக்கு வடமொழியிலுள்ள தேர்ச்சியையும், சமரச மனோபாவத்தையும் காட்டுகின்றது.

தில்லையிலே நடராஜப் பெருமானின் திருக்கோலத்தை கண்டு பரவிய—பாடிய பெரியோர் பலர். குமரகுருபர சுவாமிகள் தில்லையைச் சிதம்பர செய்யுட்கோவை, சிதம்பர மும்மணிக்கோவை என்ற இரண்டு நூல்களில் பெருமைபட பாடியுள்ளார். பதஞ்ஜலி ஆதிசேடனின் மறு உருவம். ஆதிசேடன் பூமியைத் தாங்குகின்றான். தான் இரண்டு கால்களையும் ஊன்றி நின்றால் தனது அன்பனாகிய ஆதிசேடனின் தலை தாங்காது, துன்புறுவானோ என்ற எண்ணத்தில் கருணாமூர்த்தியான நடராசப் பெருமான் ஒரு காலை ஊன்றி நிற்கின்றார் என்கிறார் குமரகுருபரசுவாமிகள்.

''புரமொன்றிரண்டும் புகையழல் உண்ணாப்
புவனமுண்ணும்
சரமொன்றகிலம் சலிக்க எய்தோய்! சலியாத
நடஞ்செய்
வரமொன்றிரண்டு மலர்தாளுமூன்றில்
தன்மாமகுடம்
பரமென்று கொல்லோ கொண்டவா
அப்பதஞ்சலியே!''

நடராஜமூர்த்தியின் ஆனந்தத் தாண்டவத்தில் ஈடுபட்ட தமிழ் வேந்தர்களில் ஒருவனான ராஜசேகரன் என்பவன், அந்த மூர்த்தி ஆடும் பரதநாட்டியம் ஒன்று தவிர மற்ற 63 கலைகளையும் கற்றான். தெய்வீகக் கலையான பரதத்திற்கு இறைவன்தான் ஆடமுடியும், தான் ஆடுவது மரியாதைக் குறைவு என எண்ணியே அதைக் கல்லாமலிருந்தான். அவன் பரதநாட்டியத்தையும் கற்கவேண்டுமென்பது இறைவனது திருவுள்ளம் போலும். சோழ தேசத்திலிருந்து வந்த புலவன் ஒருவன், 'மகராஜா! எங்கள் சோழ மன்னருக்கு அறுபத்து நான்கு கலைகளும் வரும். உங்களுக்கு அறுபத்து மூன்றுதான் வரும். நீங்கள் அறியாத கலை பரத கலை'' என்று கூற, பாண்டியன் நமக்கு ஒரு கலை குறையாயிருப்பது பாண்டிய நாட்டிற்கே குறைபோலும். அந்தக் குறையை நீக்க வேண்டியது நம் கடமை. மேலும் பரத நாட்டியக் கலையை நான் பயில வேண்டுமென்பது இறைவனின் திருவுள்ளம் போலும்'' என எண்ணி பரத நூல் வல்ல பெரியோர்களை அழைத்து தக்க சன்மானங்கள் அளித்து பரதநாட்டியம் பயிலத் தொடங்கினான்.

பாவம், ராகம், தாளம் ஆகியவற்றின் முதல் எழுத்துக்கள் சேர்ந்து பரதம் என்றாயிற்று. பாவம் என்பது பாடக்கூடிய அல்லது ஆடக்கூடிய பொருளுக்கு ஏற்ற வீரம், பயம்

வெறுப்பு, ஆச்சர்யம், இன்பம், சோகம், நகைச் சுவை, கோபம், சாந்தம் முதலான ஒன்பது குணங்களை வெளிப்படுத்துதல். இதற்கு அபி நயம் என்பர். ராகம் என்பது இசை. தாளம் பலவகைப்படும். விரிக்கிற் பெருகும். எனவே வல்லார் வாய்கெட்டுணர்தல் பொருந்தும்.

ராசசேகரன் பரத நாட்டியம் பயிலும் போது உடல் களைப்பு முதலான துன்பங் களையடைந்து ''ஆடிக் கொண்டே அனு தினமும் நிற்கும் ஆலவாய் அப்பனுக்கும் இவ்வாறு தானே இருக்கும், என எண்ணிக் கவலையுற்றான்.

பிரம்ம விஷ்ணுக்களால் காணமுடியாத இறைவனின் திருவடிகளில் ஒன்றை ஊன்றி ஒன்றை வீசி ஆடிக்கொண்டே நிற்கின்றாரே! ஊன்றிய திருவடி நோகுமே! ஆடுவதால் ஏற் படும் துன்பம் கண்டும் நான் அவரது துன் பத்தைப் பார்த்துக் கொண்டு இருப்பது குற்ற மல்லவா? யாவர்க்கும் இன்பத்தையளிக்கும் அந்தக் கூத்தை நான் எப்படி சென்று தடுப் பேன்? எனினும் அவரது திருவடி வருந்துமே' எனக் கண்ணீர் விட்டான் பாண்டியன்.

''கரியதாமரைக் கண்ணனும் கமல நான்
முகனும் காண்டற்கு
அரியதாள் ஒன்றே நோவ ஆற்றநாள்
நிற்பதந்தோ
உரியநாம் இதனைக் கற்று வருத்தமுற்றோர்ந்
தும் ஈது
தெரியநான் இருப்பதேயோ அறனெனச்
சிந்தை செய்வான்''.

இவ்வாறு எண்ணி, ஒரு சிவராத்திரியன்று கோவிலையடைந்து, நான்கு சாமங்களும் பூசை செய்தான். மனமுருகி இறைவனான நடராஜ மூர்த்தியின் திருவடிகளைததோத்திரம் செய்து அவரது ஞானக்கூத்தைக் கண்டு அகமகிழ்ந்து கண்ணீர் பெருக்கி சிரமேற் கரங்குவித்து உருகி வணங்கினான்.

''விண்டகமலர்த்தாள் ஏந்தி வெள்ளியம்
பலத்துள் அன்பர்
தொண்டு அகமலர நின்ற சோதிமெய்ஞ்ஞானக்
கூத்தைக்
கண்டு அகமகிழ்ந்து தாழ்ந்து கட்புனல்
சோரச்செங்கை
முண்டக முடிமேலேற்றி முகிழ்த்து நின்றிதனை
வேண்டும்.''

நடராஜப் பெருமானை உண்மையன் புடன் வணங்கும் உத்தமனின் மெய்ப்பாடு மேற்கண்ட பாடலில் அழகாக விளக்கப்படு கின்றது. ''இறைவனே ஊன்றிய திருவடியை எடுத்து வீசி, வீசி நிற்கும் வலது திருவடியை நிலத்தில் ஊன்றி, இன்று அடியேன் காண கால்மாறியாட வேண்டும். அன்றேல், உடை வாளை மேல் நோக்கி தரையில் ஊன்றி அதன் மேல் விழுந்து உயிரை விடுவேன்'' என்று கூறி எதிரில் ஊன்றப்பட்டிருந்த வாளின் மேல் பாயப் பாண்டியன் தாவியபோது இறைவன் திடீரென்று கால்மாறியாடிக் காட்டி பாண்டிய னது கவலையையும், ஆணவகன்மம் மாயைஆதி





மூன்று பாசங்களையும் அழித்து ஆனந்தக் கடலில் மூழ்குமாறு செய்தான்.

''நாட்டினான் குறித்துப்பாய நண்ணுமுன்
இடத்தாளூன்றி
நீட்டினான் வலத்தாள் வீசி நிருமலன்
மாறியாடிக்

காட்டினான் கன்னிநாடன் கவலையும்
பாசமூன்றும்
வீட்டினான் பரமானந்த வேலையுள்
விட்டினானே.''

கால் மாறியாடிக் காட்டிய கருணையைக் கண்டு பாண்டியன் இறைவனை வணங்கிப் போற்றி துதித்தான்.



இராசசேகரப் பாண்டியனுக்காக
ஸ்ரீ நடராஜப் பெருமான் கால்மாறியாடிய
திருக்கோலம்.

''பெரியாய் சரணம்! சிறியாய் சரணம்!
கரியாகியஅங்கணனே சரணம்!
அரியாய்! எளியாய்! அடிமாறிநடம்
புரிவாய் சரணம்! புனிதா சரணம்!''

''நதியாடிய செஞ்சடையாய் நகைவெண்
மதியாய் மதியாதவர் தம் மதியில்
பதியாய் பதினெண் கணமும் பரவும்
துதியாய் சரணம்! சுடரே சரணம்!''

''பழையாய் புதியாய் சரணம்! பணிலக்
குழையாய் சரணம்! கொடுவெண்மழுவாள்
உழையாய் சரணம் உருகாதவர்பால்
விழையாய் சரணம்! விகிர்தா சரணம்!''

''மதியாதவர் தம் மதியில் பதியாய்'' ''உருகாதவர் பால் விழையாய்'' என்ற அடிகள்

## சிவபெருமானைப் பித்தன் என்பதேன்?

அளவறு பிழைகளைப் பொறுக்கும் அகிலாண்ட நாயகியைத் தம் உடலின் பாதியில் வைத்தார். மூன்று பிழையே பொறுக்கும் கங்கையைத் தலையில் தூக்கி வைத்தார். இறைவனாருக்குப் பித்தன் என்றொரு நாமம் இதனால்தான் ஏற்பட்டதோ? என்று நயம்படப் பாடுகிறார் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை...

''தளர்பிழை மூன்றே பொறுப்பவர் தன்னைச்
சடைமுடி வைத்தனன் அதனால்
பிளவியல் மதியம் சூடிய பெருமான் பித்தன்''.

—அகிலாண்டநாயகி மாலை.

இறைவனின் கருணையைக் காட்டும் தன்மையுள்ளது.

இறைவனே! கால்மாறி நின்ற இதே திருக்கோலத்தில் என்றும் மதுரையில் இவ்வாறே காட்சியளிக்க வேண்டும்'' என்று பாண்டியன் வேண்ட இறைவன் மதுரையில் அதேபோல் இன்றும் காட்சி கொடுக்கிறான்.

''என்றுமிப்படியே இந்தத்திருநடம் யாருங்
காண
நின்றருள் செய்ய வேண்டும் நிருமலமான
வெள்ளி
மன்றவ அடியேன் வேண்டும் வரமிது என்று
தாழ்ந்தான்
அன்றுதொட்டு இன்றும் எங்கோன் அந்நட
நிலையாய் நின்றான்.''

இந்தத் திருவிளையாடலை நம் குமரகுருபர முனிவர் அனுபவித்துப் பாடுகிறார். மதுரை நாயகனான சொக்கலிங்கப் பெருமானைக் கண்டு மையல் கொண்ட பெண்ணின் தன்மை கண்டு இறைவன் திருமுன்னர் சென்று ஒருதோழி பேசுவதாக அமைகிறது இப்பாடல். ''மன்மதன் கையிலுள்ள கரும்பைத் தன்னை, துன்புறுத்துவதால் வேம்பு என்கிறாள். நின், திருத்தோளில் விளங்கும் வேப்ப மாலையைத் தனக்கு அது கரும்பு என விழைகிறாள். மாறியாடிக் காட்டும் பெருமானே! உன்னை அடைந்தவர்க்கும் அந்த வல்லபம் வரும் போலும். அதனால்தான் என் தலைவி மாறிப் பேசுகிறாள்'' என்கிறார்.

''தேனறாத சிலைக்கரும்பு கொலைக்கரும்பு
ஒரு வேம்பெனும்
தேம்புயத்தணி வேம்பினை
களிதீங்கரும்பெனும் இவ்வணம்
மாறாத மழைக்கணங்கையும் மாறியாடத்
தொடங்குமால்
மாறியாடு நின்வல்லபந்தொழ வந்த
பேர்க்கும் வருங்கொலோ.
(மதுரைக் கலம்பகம்.)

சொக்கநாயகனைக் கண்டு சொக்கிபாடிய குமர குருபரர் தன்பாட்டின் அழகால் நம்மை சொக்க வைக்கிறார். வாழ்க தமிழ்.

(தொடரும்)

# திருமருகல் திருத்தலச் சிறப்பு

**அருள் கதையரசு புலவர் பொன் சுப்பிரமணியன்**

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே

— திருஞான சம்பந்தர்

பெருக லாந்தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே

—திருநாவுக்கரசர்.

திருஞானசம்பந்த பெருமான் அருளற்புதம் நிகழ்த்திக் காட்டிய திருத்தலங்களில் ஒன்று திருமருகல். இது சோழ நாட்டில் பாடல் பெற்ற திருத்தலமாகும். காயிதேமில்லத் மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் அமைந்துள்ளது. மயிலாடுதுறை அறந்தாங்கி இருப்புப் பாதையில் நன்னிலம் புகைவண்டி நிலையத்துக்கு கிழக்கே பத்து கி.மீ. தொலைவிலிருக்கிறது. நன்னிலத்திலிருந்து நாகப்பட்டினம் செல்லும் பேருந்துகள் இவ்வூர் வழியாகச் செல்கின்றன.

நீர்வளம், நிலவளம் மிக்க, வளர்ந்து வரும் அழகிய ஊர் திருமருகல். திருக்கோபுரமும் அதன் முன் அமைந்திருக்கும் திருக்குளமும் அழகிய தோற்றமுடையவை. திருக்குளத்தின் கரைமேல் அருள்மிகு முத்து விநாயகர் எழுந்தருளியிருக்கிறார். கோயிலின் கிழக்குவாயிலில் 68 அடி உயரமுள்ள ஐந்து நிலைக் கோபுரமும், தெற்கு வாயிலில் அம்மன் சந்நிதிக்கு நேரே மூன்று மாடக்கோபுரமும் இருக்கின்றன. கோயில் செயற்கை மலைபோல் கட்டப்பெற்றது. சிலந்திச் சோழன் எனப்படும் கோச்செங்கட்சோழன் அமைத்துள்ள எழுபது மாடக் கோயிலில் இதுவும் ஒன்று, கட்டு மலைமேல் ஒரு பிரகாரமும், கீழே ஒரு பிரகாரமும் இருக்கின்றன. ஆலயத்தின் தென் மேற்கு மூலையில் சுரந்தீர்த்த விநாயகர் சந்நிதி உள்ளது. சோழ மன்னன் ஒருவன் வெப்பு நோயால் துன்புற்று இங்கு எழுந்தருளியிருக்கும் விநாயக மூர்த்தியை வழிபட்டு நோய் நீங்கப் பெற்றான் என்பது கர்ணபரம்பரைச் செய்தி. இன்றும் சுரநோய் கண்டவர்கள் இவரை வேண்டிக் கொண்டு நோய் நீங்கப் பெறுகின்றனர். வடக்குப் பிரகாரத்தில் சந்தான விநாயகர் சந்நிதி இருக்கிறது. அதற்கு எதிரில் மேற்கு நோக்கி ஒரு சிவலிங்கமூர்த்தி காணப்படுகிறார். இவரைத் திருமருகலுடையார் என்றழைக்கின்றனர். இவர்கோயில் மிகவும் பழமையானது என்று சான்றோர்கள் கூறி மகிழ்கின்றனர். இதற்கு அருகில் அருள்மிகு சௌந்தரநாயகியம்மன் சந்நிதி இருக்கிறது.

தெற்கு உட்பிரகாரத்தில் நால்வர், மற்ற நாயன்மார் சந்நிதிகளும், மேற்குப் பிரகாரத்தில் பிரதான விநாயகர், முருகன், கஜலட்சுமி சந்நிதிகளும் வடக்குப் பிராகாரத்தில் சண்டேசுவரர், நடராஜர் முதலியவர்களுடைய சந்நிதிகளும் உள்ளன.

கட்டுமலைமேல் மூலஸ்தான சுயம்பு மூர்த்தியான அருள்தரும் இரத்தினகிரிசுவரர் கிழக்கு நோக்கி பக்தர்களுக்கு அருளாட்சி வழங்கிக்கொண்டு இருக்கிறார். இவருக்கு அருள்வழங்கும் மாணிக்க வண்ணர் என்ற அழகிய திருநாமமும் உண்டு. தேவியின் திருப்பெயர் அருள்மிகு வண்டுவார்குழலி என்பது.

இத்தலத்திற்கு மூன்று தீர்த்தங்கள் முக்கியமானவை. இலக்குமிதீர்த்தம் என்பது திருக்கோயிலுக்குமுன் இருக்கும் திருக்குளம். இந்த தீர்த்தத்தில் வரலட்சுமி நோன்பு நாளிலும், மறுநாளிலும் நீராடி மாணிக்க வண்ணரை வழிபடுவோர் சகலசெல்வயோக மிக்க பெருவாழ் வடைவர் என்பது பக்தர்களின் அசையாத நம்பிக்கை. இப்போதும் பக்தர்கள் பலர் வந்து அந்நாட்களில் நீராடி இறைவனைவழிபடுகின்றனர். தெற்கு வீதியில் ஆலய அலுவலகத்தின் பின்புறம் சீராளன்குளம் இருக்கிறது. இக்குளத்திலும், சித்திரை ஐப்பசி அமாவசை நாட்களில் நீராடி மாணிக்க வண்ணரையும், வண்டுவார் குழலியையும் வழிபடுவோர் மகப்பேறு அடைவர் என்று சான்றோர்கள் கூறுகின்றனர். தற்பொழுது ஆலய அலுவலகமாக இருப்பது மடமாக இருந்ததென்றும் இவ்விடத்தே செயற்கரும் செயல் செய்த சிறுத்தொண்டர் திருமகனாகிய சீராளதேவர் கல்வி பயின்ற கல்விச் சாலையாக இருந்ததென்றும் சொல்லப்படுகின்றது. வடக்கு உட்பிரகாரத்தில் சாட்சி கிணறு என்ற தீர்த்தமும் இருக்கின்றது. இதன் சிறந்த வரலாறு பின்னர் வரவிருக்கிறது. இத்தல விருட்சம் வாழை, இது உட்பிரகாரத்தில் மதில் ஓரமாக இருக்கிறது. இக்காரணத்தால் இத்தலத்திற்குக் கதலிவனம் என்ற பெயரும் உண்டு.

கோயிலில் ஐந்து கால பூசை நடைபெறுகிறது. சித்திரையில் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. மாசி மகத்தன்று இத்தலத்துடன் இணைந்த திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு சௌரிராஜப் பெரு



மாளுடன் எழுந்தருளி திருமலைராயன் பட்டினத்திற் கடற்கரையில் தீர்த்தம் கொடுத்து திருக்கோயிலில் எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இத்திருத்தலத்தில் இன்னும் சில கோயில்கள் இருக்கின்றன. தெற்கு வீதியில் தெற்குக் கோபுரவாயிலுக்கெதிரில் விடந்தீர்த்த விநாயகர் கோயிலும், மேற்கு வீதியின் மேல்புறம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலும், வடக்கு வீதியில் முருகன் திருக்கோயிலும் இருக்கின்றன.

திருஞான சம்பந்தர் இத்தலத்திறைவன் மீது 'சடையாய் எனுமால்' என்று தொடங்கும் பதிகம் பாடியருளியிருக்கிறார். திருமருகலுடன் திருச்செங்காட்டாங்குடியையும் சேர்த்து வினாவுரையாக 'அங்கமும் வேதமும்' என்று தொடங்கும் பதிகம் ஒன்றையும் ஓதியருளியுள்ளார். இதில் 'மங்குல் மதிதவழும் மாடவீதி மருகல்' மாடங்கொடி, விண்தடவும் மருகல், 'மாமருவும் மணிக்கோயில் மருகல்' என்றெல்லாம் போற்றிப் புகழ்கிறார். அவரே, திருசேத்திரக் கோவைத் திருப்பாடலில் 'நெற்குன்றம் ஓத்தூர் நிறைநீர் மருகல் நெடுவாயில் என்று கூறியிருக்கிறார். 'நிறைநீர்' என்று சிறப்புக் கொடுத்துப் பாடியிருப்பதை இன்றும் நீர்வளத்துடன் இவ்வூர் இருப்பதால் அறியலாம்.

திருநாவுக்கரசர் ஒருபதிகம்இத்தலத்தைப் பற்றிப் பாடியருளியிருக்கிறார். அதில் ஐந்து பாசுரங்கள் அகச்சுவைபடஅமைந்திருக்கின்றன. தலைவி ஒருத்தி கிளிக்குப் பாலூட்டி வளர்த்து, சொற்கள் கற்பித்து மருகற் பெருமானிடம் தூது அனுப்புவதாகக் கூறியிருப்பது படித்து மகிழ்தற்குரியது. பொதுத் திருத்தாண்டகம் ஒன்றில் 'மருகனுறை மாணிக்கத்தை' என்று இறைவன் பெயரைக் குறிக்கிறார். சேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் 'மருகல் வன்னி நிலமலி நெய்தானத்தோடு எத்தானத்தும் நிலவும் பெரும் கோயில் பல கண்டால் கைலாய நாதனைக் காணலாம்' என்றும் கூறியிருக்கிறார். சுந்தரர் இத்தலத்திற்குத் தனிப்பதிகம் பாடவில்லையானாலும் 'வாழைக்காய்க்கும் வளர் மருகலே' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து 'வாழை' தலவிருட்சம் என்பதும் இவ்வூர், உள்நாட்டுப் பிரிவிற்குத் தலைநகராக இருந்ததென்பதும் அறியக்கிடக்கின்றது.

சேக்கிழார் பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தர் இத்தலத்தில் எழுந்தருளியதைக் கூறும் பகுதி அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியது. வைப்பூரில் தாமன் என்ற வணிகன் இருந்தான். அவனுக்கு ஏழு பெண்கள், அவனுடைய சகோதரி மகனுக்குப் பெண் கொடுப்ப தாய்ச் சொன்ன சொல் தவறி, பொருள் ஆசையால் முதல் ஆறு பெண்களையும் அயலாருக்கு மணம் முடித்துக் கொடுத்துவிட்டான். ஏழாவது

பெண் அத்தை மகனின் நிலைக்கிரங்கி அவனுடன் புறப்பட்டு திருமருகலுக்கு, அவனுடன புறப்பட்டு வந்து மாணிக்க வண்ணரை வழிபட்டு இரவில் ஒரு மடத்தில் தங்கியிருந்தனர். இரவில் அவ்வணிகனைப் பாம்பு கடிக்க அவன் இறந்தான். 'விதியினை யாவரே வெல்லும் நீர்மையர்?' திக்கற்ற அந்த வணிகப்பெண் நெடுங்குரலெடுத்து அழுது கொண்டிருந்தாள். அத்தலத்திற்கு வந்து அடியார்களுடன் தங்கியிருந்த திருஞான சம்பந்தப் பெருமான் திருக்காதில் அவள் அழுகுரல் விழுந்தது. சம்பந்தப் பெருமான் எழுந்தருளிப் பெண்ணிடம் விவரம் கேட்டார். இதைத் தெய்வத் தமிழ்ச் சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கால் அறிய வேண்டும்.

''வளம் பொழில்சூழ் வைப்பூர்க்கோன்
தாமன்எந்தை
மருமகன் மற்றிவனவற்கு மகளிர்நல்ல
இளம்பிடியார் ஒரேழுவர் இவரில் மூத்தாள்
இவனுக்கென் றுரைசெய்தே ஏதிலானுக்
குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த
பின்னும்
ஒரொருவராக எனைஒழிய ஈந்தான்
தளர்ந்தழியும் இவனுக்காகத் தகவுசெய்தங்
கவரை மறைத் திவன்தனையே சார்ந்து
போந்தேன்''

என்ற பாடலில் சுருங்கச்சொல்லி விளங்க வைத்திருக்கும் அற்புதம் அற்புதமே. காழி வேந்தரும் மாணிக்கவண்ணரை நோக்கி 'சடையாய்எனுமால்' என்னும் பதிகத்தை விண்ணப்பித்தார். பதிகம் பாடி முடிந்தபின் உறங்கி விழித்தவன் போல் எழுந்தான் வணிகன், ஆளுடைபிள்ளையாரும், மாணிக்கவண்ணர், கிணறு வன்னிமரம் இவைகள் சான்றாக வணிகனுக்கும், கன்னிகைக்கும் மணம் செய்து வைத்தனர். கோயில் சந்நிதியில் வன்னிமரமும், கிணறும், திருமணமேடையும் இன்னும் காட்சி தருகின்றன. சித்திரை பிரமோற்சவத்தில் ஆறாம் நாளன்று விடந்தீர்த்த புராணமும் ஏழாம் திருநாளன்று செட்டிப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் திருக்கலியாணமும் பக்திச் சிறப்புடன் நடைபெறுகின்றன. இதைக் கண்டு களித்தின்புற பக்தர்கள் திரள்கின்றனர்.

அருணகிரிநாதர் பாடிய பழனித்திருப்புகழில் ''தமிழ்க்காழி மருதவனம் மறைக்காடு திருமருகன் தனுக்கோடி வருகுழகர் தருவாழ்வே'' என்பதில் இத்தலத்தைக் குறித்திருக்கிறார். வடமொழியில் தலபுராணம் உண்டு. அச்சாகவில்லை. வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய ''திருமருகல் தலவரலாறு'' என்ற உரை நடைநூல் திருக்கோயிலாரால் வெளியிடப்பெற்றுள்ளது.

கீழ்க்கோபுர உள்சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. இதில் சகாப்தம் 1617-ல் தஞ்சையை ஆண்ட மன்னர் காலத்தில் சுபேதார் தீராத வினை தீர்த்த முதலியார் அகோரசிவபண்டாரம் மூலமாக மாணிக்கவண்ணசுவாமி கட்டளைக்காக 400 பொன் வழங்கியதைக் குறிக்கிறது. திருப்புகலூர்க் கோயிலிலுள்ள குலோத்துங்கன் கல்வெட்டொன்றில் சீராளதேவர் பள்ளிக்குச் செல்ல தெருவொதுக்க நிலம் அளந்துவிட்டதாகத் தெரிகிறது. கீழ் வரும் திருஞானசம்பந்தப் பெருமானின் திருப்பாடலைப் பாடித் துதித்து மாணிக்க வண்ணரை வழிபடுவோமாக.

''பாடல் முழவும் விழவும் ஓவாப் பன்மறை
யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்தடவும் மருகல்
நிலாவிய மைந்தசொல்வாய்
சேடக மாமலர்ச் சோலை சூழ்ந்த
சீர்கொள்செங்
காட்டங்குடி யதனுள்
காடகமேஇடமாக ஆடுங்கணபதி
யீச்சரங் காமுறவே''

அருள்தரும் மாணிக்கவண்ணர் உடனுறை அருள்தரும் வண்டுவார் குழலி திருவடிகளே சரணம்.

— — — —

## கந்தர் சஷ்டி விரதம்



**ஐப்பசி மாதம் வளர்பிறையில் வரும் சஷ்டி கந்தர் சஷ்டி எனச் சிறப்பிக்கப்படுகிறது.**

**ஐப்பசி மாதத்தில் வளர்பிறையில் பிரதமை திதி முதல் சஷ்டி திதி வரை முருகவேளுக்கு விசேட பூஜை செய்து விரதம் இருக்க வேண்டும்.**

**தேவர்களும் முனிவர்களும் சஷ்டி விரதம் பின்பற்றியதால் இழந்த தங்கள் பதவிகளைத் திரும்பப் பெற்றனர் என்ற வரலாறு கூறுவதே கந்தபுராணம் ஆகும்.**

# அருள்மிகு கற்பகவல்லியம்மை பதிகம்

**இராஜகுமாரி**, பி.ஏ., பி.எல்,,

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஔவையார் வாக்காகும். தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்றாக திருமயிலைத் திருத்தலம் விளங்குகிறது. சென்னை மாநகரின் நடுநாயகமாக மயிலையே கயிலை, கயிலையே மயிலை என்று சிறப்புடன் கூறும்படியாக விளங்கும் மயிலை என்றவுடனே அனைவருக்கும் நினைவில் வருவது கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயிலே ஆகும்.

''புன்னாகனைத் தெழில்சேர் கயிலை மலை
யுமை மயிலாப்பூசை செய்யும்
நன்னா மத்தான் மயிலையென விளங்குமூதூர்'

ஒரு சமயம் கைலாயத்தில் சிவபெருமான் உமையம்மையாருக்கு ஐந்தெழுத்தின் பெருமையையும் திருநீற்றின் மகிமையைப் பற்றியும் விளக்கம் செய்து கொண்டிருந்தார், அப்போது அங்கு ஒரு மயில் தன் அழகிய தோகையை விரித்தாடியது. அதன் அழகில் மயங்கிய அம்மையாரின் கவனம் மயிலின் பக்கம் திரும்பி விட்டது. இதை அறிந்த சிவபெருமான் கோபமுற்று''நீ பூவுலகில் மயிலாகப் பிறக்கக்கடவாய்'' என்று சாபமிட்டார். இதனால் மிகவும் வருத்தமுற்ற தேவியார் தனக்கு சாப விமோசனம் அளிக்க வேண்டும் என்று இறைவனிடம் வேண்ட 'புண்ணிய நாடாகிய தொண்டை நாட்டிற்குச் சென்று தவமியற்றுவாய்' என்று கூறினார். உடனே உமாதேவியார் தற்போதைய மயிலையில் புன்னை மரத்தின் கீழ்ச் சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து பூசித்து வந்தார். தேவியின் வழிபாட்டில் மகிழ்ச்சியடைந்த சிவபெருமான் தேவியின் முன் தோன்றி மயிலாக இருந்த அம்மைக்கு காட்சி அளித்து சாப விமோசனம் செய்து தேவி கற்பகவல்லி என்ற பெயருடன் விளங்க வரமளித்தார். தேவியும் மகிழ்ந்து ''இப்பெரும்பகுதிக்கு மயிலை என்னும் பெயர் ஓங்க வேண்டும். என்னுடன் தாங்கள் பிரியாது இருக்க வேண்டும். இங்கு வந்து வழிபடுபவர்களுக்கெல்லாம் தாங்கள் அருள் புரிய வேண்டும்'' என்ற வரங்களைக் கேட்டுப் பெற்றார்.

தமக்கு வேண்டியவற்றைக் கேட்டுப் பெற வேண்டி வருவோரும், வேண்டியதைக் கிடைக்கப் பெற்றமைக்கு நன்றி கூற வருவோரும், இவ்வுலகம் வெறும் மாயை என்பதை உணர்ந்து தம்மையே அர்ப்பணிக்கத் தயாராகி பிறவிப்பிணியை தீர்க்க வேண்டிவருவோரும் தன்னைச் சுற்றிவர, வேண்டுவோர்க்கு வேண்டியனவெல்லாம் தரும் விண்ணுலகக் கற்பகத்தருவைப் போல மண்ணுலகத்துக் கற்பகமாய் புன்னகை பூத்தவளாய் காட்சியளிக்கிறார் கற்பகவல்லி.

''ஆடும் மயிலாய் உருவெடுத்து அன்று
இறைவன் திருத்தாள்
நாடி அர்ச்சித்த நாயகியாய் நின் நாமங்களைப்
பாடி உருகிப் பரவசம் ஆகும் அப்பாங்கு
அருள்வாய்
காடெனவே பொழில் சூழ் மயிலாபுரிக்
கற்பகமே''

என்று துதி பாடி பிரகாரத்தைச் சுற்றி வரும் நமக்குக் கண்களில் தெரிவது நம் கருத்தை கவரும் படியாக சுவரில் மாட்டப்பட்டிருக்கும் அம்மனின் பல திருவுருவப்படங்களும் சுவரில் செதுக்கப்பட்டிருக்கும் பாடல்களும் ஆகும். கோயில்களில் இறைவனை தரிசிப்பதோடு அவர்களைப் பாடியும் களிப்பதற்காக பக்தர்கள் பாடிய பாடல்களைச் சுவரில் செதுக்கி வைத்திருக்கிறார்கள். பிரகாரத்தின் கிழக்குப்பக்கச் சுவரில் காணப்படும் தாச்சி அருணாசலம் முதலியார் அவர்களால் பாடப்பட்ட கற்பகவல்லியம்மை பதிகத்தின் ஒரு பாடலைமட்டும் இங்குக் காண்போம்.

இல்லாமை என்னொமொரு பொல்லாத
பாவியால்
எந்நேரமும் இடருறாமல்,
ஏற்காமல் ஏற்பவர்க்கு இல்லைஎன்று
உரையாமல்
இழிதொழில்கள் செய்திடாமல்,
கல்லாத புல்லர் உறவு இல்லாமல் அடுபிணி
கனாவிலும் எனைத் தொடாமல்
கற்ற பெரியார்களொடு தர்க்கித்து
எதிர்த்துநான்
கடிந்த சொல் சொல்லிடாமல்,
கொல்லாது கொல்லு மடமங்கையர்கள்
இங்கிதக்
கொள்ளையில் மயங்கிடாமல்
குறையொன்றும் வாராமல் உனதடிமை
செய்யஅருள்
கூட்டுவாய் மதவேளைமுன்

வெல்லாமல் வென்றவன் இடத்தில் வளர்
அமுதமே
விரிபொழில் திருமயிலை வாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப் பதவல்லி
விமலிகற்பக வல்லியே.

மயிலையில் கொலுவிருக்கும் அருள்மிகு கற்பகாம்பாளைத் தஞ்சம் அடைந்தார்க்கு சஞ்சலம் ஏது! சகல சௌபாக்கியங்களும் அவர்தம் வாழ்வில் மங்காமல் நிலைத்து நிற்கும்.

# லிங்கபுராணம்

**வித்யாவாசஸ்பதி டாக்டர் இரா. நாகசாமி**
**தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் (ஓய்வு)**

இலிங்கபுராணம் முதலில் நூறு கோடி செய்யுட்களால் இயற்றப்பட்டு மிகவும் விரிந்த புராணமாகத் திகழ்ந்தது. உலகிலுள்ளோர் இதை எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு பிரமன் இதைச் சுருக்கி ஒரு கோடி செய்யுட்களில் இயற்றினார். அதை வியாச முனிவர் மேலும் சுருக்கி நான்கு நூறாயிரம் (நான்கு இலட்சம்) பாடல்களில் பாடினர். இதுவும் மிகவும் பெரிய நூலாக இருந்தமையால் சூதன் என்பவர் சுருக்கிப் பதினோறாயிரம் பாடல்களில் இயற்றினார். வியாச முனிவர் எழுதிய பதினெட்டுப் புராணங்களில் இது பதினொன்றாவது புராணமாக இயற்றப்பட்டது. இப்புராணத்தைக் கேட்போர் கைலையங்கிரியில் இனிது அமர்ந்திருப்பர் என்பது வரலாறு. இச்செய்திகள் ''புராண அளவு சொன்ன அத்யாயம்'' என்ற பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளன. கீழ் வரும் மூன்று பாடல்கள் அச்செய்திகளை விவரிக்கின்றன.

''ஆறுகால்அளி குடைந்துண அரும்பு
வாயவிழ்ந்த
நாறுதாமரை பொகுட்டுறை நான்மறைக்
கிழவன்
நூறுகோடியாய் விரிந்தஇந் நூலினை உலகர்
தேறுமாறு ஒரு கோடியாய்த் தெள்ளிதில்
தெரித்தனன்''

''அதனை நான்கு நூறாயிரமாக முன்வகுத்து
முதிய நான்மறை முறைபட கோத்த
சீர்வியாதன்
விதியில்கூறினன் விரிந்தஇந் நூலினைத் தெரிந்து
பதினொரு ஆயிரமாக நாம் பாற்படுத்துரைப்
பாம்''

''அராஅணிந்த செஞ்சடையவன் அறை கழல்
கழலட்
பராய நல்தவ வியாதன் முன்பகர்
பதினொன்றாம்
புராணம் ஈங்கிது கேட்பவர் பொலன்
முகடுடைய
உரிய வெள்ளியம் பொருப்பினில்
உவந்தினிதிருப்பர்''

இந்த தமிழ்ப்பாடல்களில் உள்ள செய்திகள் அப்படியே சம்ஸ்கிருத லிங்கபுராணத்தில் காணப்படுகின்றன.

ஈசானகல்ப விருத்தாந்தம்

அதிகிருத்ய மஹாத்மனா
பிரும்மனா கல்பிதம் பூர்வம்
புராணம் லைங்கம் உத்தமம்
கிரந்தகோடி பிரமாணம்து
சதகோடி பிரவிஸ்தரே
சதுர்லசேட்சண ஸம்சிப்தே
வியாஸை: சர்வாந்தரேசு’ வை
வ்யஸ்தே அஷ்டாதசதா சைவ
பிரும்மா ஆதௌ துவாபராதிஷீ
லிங்கம் ஏகாதசம் புரோக்தம்
மயா வியாசாத் சுருதம் சயத்
அஸ்ய ஏகாதச ஸஹஸ்ரே
க்ரந்தமானம் இஹத்விஜா:
தஸ்மாத் ஸம்சேபதோ வட்ச்யே
ந: ஸ்ருதம் விஸ்தனே யத்
சதுர்லசேட்சண ஸம்சிப்தே
கிருஷ்ண த்வைபாயனேனது
அத்ர ஏகாதச ஸாஹஸ்ரை:
கதிதோ லிங்க சம்பவ:

சம்ஸ்கிருத லிங்க புராணத்தில் உள்ள மேற்படி செய்திகளை வரகுணராம குலசேகரன் அப்படியே தமிழ்படுத்தியுள்ளவைதான் முதலில் குறித்த மூன்று தமிழ்ப் பாடல்களும். இதிலிருந்து லிங்கபுராணம் என்பது முதலில் மிகவும் பெரியதாக இருந்தது. மீண்டும் மீண்டும் சுருக்கி இப்பொழுதுள்ள நூல் 'சூதபௌராணிகர்' என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. அதை குலசேகரன் தமிழ்ப்படுத்தியுள்ளார் என்பதும் தெரியவருகிறது.

இதையடுத்து இந்நூலில் என்ன என்ன புராணக் கதைகள் இடம் பெற்றுள்ளன, என்ன தத்துவங்கள் போதிக்கப்பட்டுள்ளன என்று ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலை அனுக்ரமணி என்று நூல் கூறுகிறது.

''இதி ஸ்ரீலிங்கபுராணே பூர்வ பாகே அனுக்ரமணிகாவர்ணனம் நாமத்விதியோத்யாய; தமிழ் இலிங்கபுராணத்திலும் ''அனுக்ரமணி'' என்ற தலைப்பில் இதே பட்டியல் கொடுக்கப் பட்டுள்ளது.

சிவபெருமான் தமது கரத்தில் திரிசூலத் தைத் தாங்கியிருக்கிறார். அந்த சூலம் மூன்று இதழ்களைக் கொண்டதாக மூவிலை நெடு வேலாகத் திகழ்கிறது. முத்தலைகளைக் கொண்ட இச்சூலம் எதைக் காட்டுகிறது என்றால் இவ்வுலகின் தோற்றத்தையும் காத் தலையும் மறைத்தலையும் செய்யும் மூன்று கடவுளர்களாகி பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் யாமே என்று கூறுவது போல் உள்ளது இச்சூலம். இச் சூலத்தை தரித்துள்ள இறைவன் கறுத்த மிடற்றை உடையவன். அப் பெருமானின் திருவடிகளை வணங்குகிறேன் என்று தொடங்குகிறது இந்நூலின் கடவுள் வாழ்த்து.

''சீர்பூத்த முத்தொழிலும் திறம்பாது
நன்றியற்றும்
ஏர்பூத்த முத்தேவும் யாமே என்று இசைப்பது
போல்
போர் பூத்த முத்தலைவேல் பூங்கமலக் கரத்து
ஏத்தும்
கார் பூத்த மிடற்று இறைவன் கணைகழல்தாள்
வணங்குவாம்''.

என்பது தமிழ் இலிங்கபுராணக் கடவுள் வாழ்த்து. இதையே சமஸ்கிருத இலிங்க புராணமும்

''ஓம் நமச்சிவாய

நமோ ருத்ராய ஹரயே

பிரும்மனே பரமாத்மனே

பிரதான புருஷேசாய

சர்க்க ஸ்திதி அந்த காரிணே''

என்று கடவுள் வணக்கத்தோடு தொடங்கு கிறது. இரண்டு கடவுள் வாழ்த்துகளிலும் உள்ள கருத்தொற்றுமையைக் காணலாம்.

தமிழ் நூலில் கடவுள் வாழ்த்தாக பதின் மூன்று பாடல்கள் உள்ளன. அவற்றில் முறையே விநாயகர், நடேசர், சிவம், சக்தி, பால கணபதி, பழனிகந்தன், சம்பந்தர், சுந்த ரர், அப்பர், மாணிக்கவாசகர், அகோரசிவா சாரியார், சிவனடியார் ஆகியோர் துதிகள் இடம் பெற்றுள்ளன. பாயிரத்தையும் சேர்த்து 13 பாடல்கள். சிவபரனை வணங்கி விட்டு நேரே கதைக்கு சென்று விடுகிறது வடமொழி லிங்க புராணம். தமிழ்நூலில் தமிழ் மர புக்கேற்ப நால்வர் துதியும், சிவனடியார் துதி யும், பிற துதிகளும் உள்ளது சிறப்பாகும்.

(தொடரும்)

## மதுரை இளங்குமரனார் அவர்கள் எழுதியுள்ள

# ''வள்ளுவர் வழியில்''

## நூல்கள் அறிமுகம்.

— நிறைமதி

**நூல்களின் பெயர்கள் ;**

1. நல்ல மாணவராக
2. நல்ல ஆசிரியராக
3. நல்ல கணவனாக
4. நல்ல மனைவியாக
5. நல்ல பெற்றோராக
6. நல்ல மக்களாக
7. நல்ல இல்லறத்தாராக
8. நல்ல துறவராக
9. ஊழ்
10. குறளாயத் திருமண முறையும் விளக்கமும்
11. நல்ல தோழராக
12. நல்ல தொழிலாளராக
13. நல்ல ஆட்சியராக
14. நல்ல அலுவராக
15. நல்ல செல்வராக
16. நல்ல சான்றோராக

பக்கம்: ஒவ்வொரு நூலும் 32 பக்கங்கள்.

நூலின் விலை: ஒவ்வொரு நூலும் ரூ. 4.

வெளியீடு: அமரர்வேலா நினைவு வெளியீடு,
குறளாயம், 3, மண்டப வீதி,
ஈரோடு-638001.

''பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க' என்று சான்றோர் வாழ்த்துவர். திருக்குறளைக் கற்று திருக்குறளின் வழி வாழ்வை நடத்தினால் பதினாறு பேறுகளும் ஒருங்கு வாய்க்கும் என் பதை உணர்த்துவதைப் போல, குறள்நெறி தழைக்க வாழ்வாங்கு வாழ்ந்த அமரர் வேலா அவர்களின் நினைவைப் போற்றி இப்பதினாறு அரிய தமிழ்நூல்களை எழுதி அன்னை தமி ழுக்கு அருந்தொண்டு புரிந்துள்ளார் மதுரை இளங்குமரனார் அவர்கள். செந்தமிழ் வித்தக ரான மூதறிஞர் மதுரைஇளங்குமரனார் முன்ன மும் பல அரிய தமிழ்நூல்களை இயற்றி பெரும் புகழ் கொண்டு விளங்குகின்றார் என்றபோதும் அவர் புகழுக்குப் புகழ் சேர்க்கும் தமிழ்க் கருத்துக் கருவூலமாக இப்பதினாறு நூல்களும் வெளி வந்துள்ளன என்று கூறினால் அது மிகையன்று; உண்மையே யாகும். தமிழ்ப் பெருமக்கள் தங்கள் மக்கட் செல்வங்களுக்குப் பிறந்தநாள் பரிசாக, திருமணநாள் பரிசாக வாங்கி வழங்கிடத்தக்க நூல்களாகும் இவை. ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும், நூல கங்களிலும் இடம் பெறுவதோடு, இல்லங்கள் தோறும் இருக்க வேண்டிய வாழ்வின் வழி காட்டியான நூல்கள் இவை என்று போற்றுவ தும் சாலத் தகும்.

# வரலாற்றுச் சிறப்புமிக்க திருவரங்கம்

**ப. தனபால்**, எம்.ஏ.,பி.எல்

துணை ஆணையாளர்,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு அரங்கநாதர் ஆலயம்,
திருவரங்கம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவரங்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் 108 வைணவ திருத்தலங்களில் தொன்மையான திருக்கோயிலாகும். 12 ஆழ்வார்களில் 11 ஆழ்வார்கள் இதன் புகழை, பெருமையை - கீர்த்தியை பாடியுள்ளார்கள். இந்த தலத்தில்தான் ஆண்டாள், திருப்பாணாழ்வார், பீபி நாச்சியார் மற்றும் பலர் அரங்கனின் திருவடியை அடைந்தனர்.

பூலோக வைகுண்டமென்றும் பெரிய கோயில் என்றும் வழங்கப்பெறும் இத்திருக்கோயில் கங்கையிலும் புனிதமாகக் கருதப்படும் காவேரி நதிக்கரையில் திருவரங்கத்தில் அமைந்துள்ளது. திரேதாயுகத்தில் இட்சுவாகு வம்சத்து அரசர்களால் பிரம்மதேவனிடம் பெற்று பூசிக்கப்பட்டு வந்த ரெங்கவிமானம் ஸ்ரீராமபிரானால் விபீஷணருக்கு வழங்கப்பட்டு அவர் அத்துடன் இலங்கை நோக்கி செல்கையில் ரெங்கனாதப் பெருமாள் இங்கு தங்கிவிட நியமனம் கொண்டு தங்கிவிட்டதாக் ஐதீகம். பல்லாயிர வருடங்களுக்கு, முன் இராமாயண காலத்திலிருந்தே இத்திருக்கோயில் ஏற்பட்டிருந்த போதிலும் அதற்குப்பின்னும் ஏற்பட்ட "நாலாயிர திவ்யபிரபந்தங்கள்" "சிலப்பதிகாரம்" ஆகியவைகளில் திருவரங்கத்தைப் பற்றியும் பெருமாளைப் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டிருப்பதால் இத்திருக்கோயில் சுமார் ஐந்து ஆயிரம் ஆண்களுக்கு முற்பட்டது எனத் தெளியலாம்.

இத்திருக்கோயில் பல்வேறு காலங்களில் சோழ அரசர்கள், பாண்டிய அரசர்கள், ஹொய்சல அரசர்கள், விஜயநகர அரசர்கள் மற்றும் நாயக்க மன்னர்கள் போன்ற பல்வேறு அரசர்களால் கட்டப்பட்டும் அபிவிருத்தி செய்யப்பட்டும் வந்துள்ள போதிலும் மொகலாய மன்னர்களான மாலிக்காபூர் மற்றும் மகம்மது பின் துக்ளக் ஆகியோர்களால் படையெடுக்கப்பட்டு அதனால் பெருவாரியாக பாதிக்கப்பட்ட திருக்கோயில், பதினைந்தாம் நூற்றாண்டிற்கு பிறகு புனருத்தாரணம் செய்யப்பட்டும் புதிதாகக்கட்டப்பட்டும் தற்போதைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.


தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்று வகையிலும் பிரசித்தி பெற்றதும் நவக்கிரஹ மூர்த்திகளில் ஒருவரான சுக்கிரனால் பூஜிக்கப்பட்டவருமான அருள்மிகு ரெங்கனாதர் மீது ஆழ்வார்களும் ஆசார்ய புருஷர்களும்மங்களாசாசனம் செய்துள்ளனர். மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ள 108 வைணவ திவ்ய சேத்திரங்களுக்குள் திருவரங்கம் தலைமையானதாகவும் அதிமுக்கியத்வம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. பாஞ்சராத்ர ஆகமவிதிகளின்படியும் தென்கலை சம்பிரதாயப்படியும் பூஜைகள் செய்யப்படுகின்றன. காலை 6.15 மணிக்கு விஸ்வரூப தரிசனத்துடன் ஆரம்பமாகும் வழிபாடு இரவு 9.00 மணி அரவணை வரை தொடர்ந்து நடைபெறுகிறது.

திருக்கோயில் வளாகத்திற்குள் அவ்வப்போது பெருமாள் தீர்த்தவாரி நடைபெறும். சந்திரபுஷ்கரணி மற்றும் சூர்யபுஷ்கரணி என்னும் இரண்டு சிறிய வட்ட வடிவ திருக்குளங்கள் உள்ளன. இவை தவிர தெப்போற்சவம் நடைபெறுவதற்கு பெரிய சதுரவடிவமான தெப்பக்குளம் ஒன்று கோவிலுக்கு வெளியே மேற்கு கோபுரத்தின் அருகே அமைந்துள்ளது.

அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த வேணுகோபாலன் சந்நிதி நான்காம் பிரகாரத்தில் அமைந்துள்ளது. இதன் வெளிப்புறச் சுவர்கள் மிகவும் அழகிய உயிர்ப்புள்ள புடைப்பியற் சிற்பங்களால் அழகுசெய்யப்பட்டுள்ளன. சேஷராயர் மண்டபத்தின் முகப்பில் உள்ள எட்டுத்தூண்களிலும் சிறந்த உயிர்ப்புள்ள சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. 212 தூண்களைக் கொண்ட அழகு வாய்ந்த கருடமண்டபம், கருடாழ்வார் சந்நிதி வெளிப்புறச் சுவர்களில் அழகிய தேவகோஷ்டங்களும் கும்பச்சரங்களும் கொண்டவையாகும்.

வழிபாட்டில் இல்லாத பண்டைய பல கலைப்பொருள்கள் கோயிலில் இருக்கின்றன. அவற்றைப் பொதுமக்கள் பார்க்கும் வாய்ப்பு அளிக்கவே அரங்கர் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

அரங்கர் கலைக்கூடத்தில் உலகப்புகழ் பெற்ற தந்தச் சிற்பங்கள், தெய்வீக செப்புத் திருமேனிகள், முத்துத்திரை, பண்டையபெரும் பூட்டுகள், பண்டைய காசுகள், வரலாறு கூறும் செப்பேடுகள், கற்சிலைகள் ஆகிய அனைத்தும் இடம் பெற்றுள்ளன.



கலைக்கூடத்தில் காட்சியில் முதலிடம் பெறுபவை தந்தச் சிற்பங்கள், கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் இச்சிற்பங்கள் செய்தளிக்கப்பட்டவை. இவற்றின் கலையழகையும், தொழில் நுணுக்கத்தையும்உலகமேவியக்கிறது. இச்சிற்பங்களில் தெய்வீக உருவங்களும், நாயக்க மன்னர்களின் உருவங்களும் ஆக இருவகை உண்டு. தெய்வ உருவங்களில் திருமாலின் பல உருவங்களும் சிவபெருமானின் பல உருவங்களும் உள்ளன. நாயக்க மன்னர்கள் தங்கள் தேவியருடன் இணைந்து நிற்பதை மற்ற சிற்பங்கள் காட்டுகின்றன.

தெய்வீக உருவங்களைச் செப்புத்திருமேனிகளாக வார்த்து, விழாக்காலங்களில் வீதி உலாவாக எடுத்துவரும் நம் மரபை உலகம் போற்றுகிறது. தமிழகச் செப்புத் திருவுருவங்களுக்கு உலகில் பெரும் மதிப்பு உள்ளது தெரிந்ததே. அவற்றில் சில உருவங்கள் திருஅரங்கம் கலைக்கூடத்தில் உள்ளதைக் காணலாம். இங்குள்ள மதுரை நாயக்கர், தஞ்சையை ஆண்ட மராட்டியர் காலங்களில் செய்த பாவை விளக்குகள் அக்கால உடைகளையும் அணிகளையும் விளக்குகின்றன.

நல்முத்தாலான நல்லதொரு திரையில் நடராஜ உருவைக் காணலாம். பண்டு கோயில்களில் இருந்த பெரும் பூட்டுகளும் இங்கு இடம் பெற்றுள்ளன. ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள் (உலாந்தாக்காரர்கள்) முதலியோர்வெளியிட்ட பண்டைய நாணயங்களையும், திருவாங்கூர், ஹைதராபாத், குவாலியர் முதலிய சமஸ்தானங்கள் வெளியிட்ட காசுகளும் இங்கு காட்சியில் உள்ளன.

இங்கு பல செப்பேடுகள் உள்ளன. இவை பெரும்பாலும் விஜயநகர மன்னர்கள் காலத்


# ஸ்ரீ கற்பகவல்லி அம்மை பதிகம்

நடத்தையில் அடக்கமும் பிணக்கற்று
வணக்கமுறு
நற்குணமும் நற்செய்கையும்
நலந்தரும் கல்வியும் செல்வமும் அதற்கான
நல்லோர் இடத்தில் உறவும்
திடத்துமனமும் பொறுமையுப் திறமையும்
தரும்
சிந்தனையும் அதிநுட்பமும்
தீனர்கள் இடத்தில் விசுவாசமும் என்றுங் அவர்
தீப்பசி தணிக்க நினைவும்
கடக்க அரிதான ஜனனக் கடல்கடந்து
கதிகாண மெய்ஞ்ஞான மோனக்
கப்பலும் தந்துதவி செய்து ரட்சித்து
கடைத்தேற அருள் புரிகுவாய்,
விடக்கடு மிடற்றினன் இடத்தில்வளர் அமுதமே
விரிபொழில் திருமயிலைவாழ்
விரைமலர்க் குழல்வல்லி மரைமலர்ப்பதவல்லி
விமலி கற்பகவல்லியே.

—தாச்சி. அருணாசல முதலியார்.

துவை. இரண்டாம் தேவராயர், ஹரிஹரன், கிருஷ்ண தேவராயர், மல்லிகார்ச்சுனன் முதலிய மன்னர்கள் அளித்தவை இங்குள்ளன. கிருஷ்ணதேவராயர் அளித்த இரண்டு செப்புப் பட்டயங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் சம்ஸ்கிருத மொழியிலும், தெலுங்கு எழுத்துக்களிலும் உள்ளன. ராணி மங்கம்மாள், சொக்கநாத நாயக்கர் முதலிய மதுரை மன்னர்கள் காலத்திய செப்பேடுகளும் உள்ளன, இது தவிர பழங்கால ஓலைச்சுவடிகளும் இடம் பெறுகின்றன.







## கடவுள் - கற்பகம்

**கடவுள் கற்பக மரத்தைப் போன்றவர். நீ அவரிடம் வேண்டுவது உனக்குக் கிடைக்கும்.**

*—இராமகிருஷ்ண பரமஹம்சர்*

சில அழகிய கற்சிலைகளையும் கலைக் கூடத்தில் காணலாம். இவற்றில் ஒரு கல்லாலான கோயிலின் மாதிரி உருவம் உள்ளது. பெருங்கோயில்கள் எழுப்புவதன் முன், இது போன்ற மாதிரி உருவங்கள் செய்வதும் நம் மரபு. அவ்வாறு சமைகப்பட்டதே இக்கோயில்.


இது தவிர வரலாற்றுச் சிறப்பு மிக்க இன்னும் பல பொருள்களும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

சென்னையிலிருந்து சுமார் 330 கிலோ மீட்டர் தெற்கேயும், மதுரையிலிருந்து சுமார் 130 கிலோ மீட்டர் வடக்கேயும், கோவையிலிருந்து சுமார் 200 கிலோ மீட்டர் கிழக்கேயுமாக அமைந்துள்ள இத்தலத்தை அடைவதற்கு இரயில், பஸ், மற்றும் விமான வசதி உள்ளது.

சுமார் 156 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இத்திருக்கோயில் வளாகத்தில் 22 கோபுரங்கள் ஏற்கெனவே அமைந்துள்ள போதிலும் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு நாயக்க மன்னர்களால் ஆரம்பிக்கப்பட்டு முற்றுப் பெறாதிருந்த தெற்கு ராயகோபுரம் அகோபிலமடம் ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஜீயர் சுவாமிகளின் பெருமுயற்சியால் தென்கிழக்கு ஆசியாவிலேயே உயரமானதாக 236 அடி உயர உயரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதான உலகப் பிரசித்திப் பெற்ற திருக்கோயிலுக்கு எட்டு உபகோயில் களும், கோயில் உட்புறத்திலேயே 42 உப சந்நதிகளும் உள்ளன. இத்திருக்கோயிலில் ஒரு சமய நூலகமும் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு நாடு முழுவதிலிருந்து பலதரப்பட்ட சேவார்த்திகள் வந்து செல்வதால் அவர்களுக்கு தேவைப்படும் பொதுவான தகவல்களை அளிப்பதற்கு தகவல் மற்றும் விற்பனை நிலையம் புதிதாக துவங்கப்பட்டு இயங்கி வருகிறது. பக்தர்கள் அனைவரும் திருவரங்கன் மற்றும் ரெங்கநாச்சியாருக்கு நடைபெறும் பூசைகளில் நேரடியாகப் பங்கு பெறும் வண்ணம் ''நித்திய ஆராதனை திட்டம்'' ஒன்று அமுலாக்கப்படவுள்ளது. அதைப்போன்று திருக்கோயிலுக்கு சேவார்த்திகளில் வரும் குறைந்த பட்சம் 300 சேவார்த்திகளுக்கு தற்போது தினமும் வழங்கப்பட்டு வரும் தயிர்சாத ததியாராதன கட்டளைத் திட்டத்தினை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்புராதான திருக்கோயிலுக்கு வருகை தரும் வெளியூர் சேவார்த்திகளின் தங்கும் வசதிக்காக 10 அறைகளைக் கொண்ட தங்கும் விடுதி கட்டப்பட்டு வருகிறது.

இவ்வாறு சமயச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும், கட்டிடச்சிறப்பும், கலைச்சிறப்பும் ஒருங்கே பெற்றது இத்திருக்கோவில் என்றால் அது மிகையாகாது. எல்லால் வல்ல அருள் தரும் திருவரங்கநாதரை தரிசித்து அருள் பெற அழைக்கின்றேன்.



# சுசீந்திரம்

## தாணுமாலயன் ஆலயம்

டாக்டர் எஸ். பத்மநாபன்,
நாகர்கோயில்

மும்மூர்த்தித் தத்துவம் பழம்பெரும் சமயங்கள் பலவற்றிற்குப் பொதுவானது. எகிப்து நாட்டிலே இறைவனை மும்மூர்த்தியாக வழிபட்டனர். ''ஒரே கடவுளைச் சான்றோர் பல பெயரிட்டழைக்கின்றனர்'' என்று ரிக்வேதம் கூறும். இறைவன் ஒருவனே; அவன் செயல்கள் பல. இப்பல்வேறு செயல்களின் உருவகம்தான் இந்து சமயத்தினரின் பல்உருவ வழிபாட்டுக் கொள்கை. படைப்பவன் பிரம்மா. காக்கும் கடவுள் திருமால். அழிப்பவன் சிவன். மாலும் அயனும் சிவனிடமிருந்து தோன்றினர் என இலிங்க புராணம் கூறுகின்றது. திருமாலின் நாபியிலிருந்து பிரம்மா தோன்றினார் என்றும், சிவனும் திருமாலும் பிரம்மனின் நெற்றியிலிருந்து அவதரித்தனர் என்றும் மகாபாரதம் தெரிவிக்கின்றது. சுருங்கக்கூறின் மும்மூர்த்திகளும் ஒருவரோடொருவர் பின்னிப்பிணைந்துள்ளனர் என்பதே இந்து சமயத்தாரின் கொள்கை, ஒருவரின்றி வேறொருவர் இல்லை.

பிரம்மன், திருமால், சிவன் மூவரும் ஒருவரே என்ற தெளிந்த கருத்தை ''ஆதிப் பிரானும், அணிமணிவண்ணனும் ஆதிக் கமலத்து அலர் மிசையானுஞ், சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில்ஒன்றெனர் பேதித்து உலகம் பிணங்குகின்றாரே'' எனத்திருமூலர் தமது திருமந்திரத்திலே அழகுற எடுத்துக் காட்டுகின்றார். இறைவன் ஒருவனே அவன் தான் மகேஸ்வரன், படைத்தல் தொழிலை அவன் செய்யும்போது பிரம்மா எனவும், காக்கும் தொழிலைச் செய்யும்போது திருமால் எனவும், அழிக்கும் தொழிலைச் செய்யும்போது சிவன் எனவும் அழைக்கப்படுகிறான்.

மும்மூர்த்தித் தத்துவத்தை கம்பன் நமக்கு மிக அழகாக கூறுகின்றான்.


''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடை யாரவர்
தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே''

இந்த சமரசஞானத்தைப் பல சமயங்களும், இலக்கியங்களும் எடுத்துக் கூறினாலும் மும்மூர்த்திக்காக அமைந்த ஒரே கோயில் குமரி மாவட்டத்திலுள்ள சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம் தான். நாகர்கோவில் கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் நாகர்கோவிலிலிருந்து ஐந்து கி.மீ. தெற்கே சுசீந்திரம் உள்ளது. பழையாற்றின் கரையில் இயற்கையெழில் மிக்க சூழ்நிலையில் ஓங்கியுயர்ந்த கோபுரத்துடன் தாணுமாலயர் ஆலயம் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. தாணு சிவனையும், மால் திருமாலையும், அயன் பிரம்மனையும் குறிப்பிடும்.

அத்திரி முனிவருக்கும் கற்பிற் சிறந்த அவருடைய மனைவியான அனுசூயாவுக்கும் ஞானாரண்யத்தில் மும்மூர்த்திகளும் லிங்க வடிவில் தோற்றமளித்து அங்கேயே உறைந்தனர் என்று சுசீந்திரம் தலபுராணம் கூறுகின்றது. சுசீந்திரத்தை அடுத்துள்ள இன்றைய ஆசிரமம் தான் அன்றைய ஞானாரண்யம் என்பர். மூலவரான லிங்கத்தின் மேல்பாகம் சிவஅம்சமாகவும், நடுப்பாகம் விஷ்ணு அம்சமாகவும், அடிப்பாகம் பிரம்ம அம்சமாகவும் கருதப்படும்.

ஞானாரண்யத்தில் அத்திரி முனிவர் கற்பிற் சிறந்த தம் மனைவி அனுசூயாவுடன் வாழ்ந்து வந்தார். நாட்டு நலம் வேண்டி மனைவியை ஆசிரமத்தில் விட்டு விட்டு இமய மலைக்குத் தவம் செய்யப் புறப்பட்டுச் சென்றார். நாரதர் மூலம் அனுசூயாவின் கற்பின் சிறப்பைக் கேள்வியுற்ற கலைமகள், திருமகள், மலைமகள் மூவரும் மும்மூர்த்திகளிடமும் அவளது கற்பைச் சோதிக்க வேண்டினர். மும்மூர்த்திகள் தவசியர் உருக்கொண்டு அத்திரியின் ஆசிரமத்துக்கு அதிதிகளாக வருகின்றனர். வந்த விருந்தினர்களை உபசரித்து உணவு பரிமாற அனுசூயா முனைந்தபொழுது தவசியர்களாக வந்த மும்மூர்த்திகள் அவள் பிறந்த மேனியாகவே தங்களுக்கு உணவு பரிமாறவேண்டும் என்று கூறுகின்றனர். மனங்கலங்கிய அனுசூயா தன் கணவரது பாத தீர்த்தத்தை அவர்கள் மேல் தெளித்து மும்மூர்த்திகளையும் மூன்று குழந்தைகளாக்கி உணவூட்டுகிறாள். நாரதர் மூலம் இந்த செய்தியைக் கேள்வியுற்ற தேவியர் மூவரும் அனுசூயாவிடம் வந்து தங்கள் கணவர்கள் சுயரூபம் அடைய தவம் கிடக்கின்றனர். தேவியரின் வேண்டுகோளுக்கிணங்கி அனுசூயா மும்மூர்த்திகளையும் தங்கள் பழைய உருவங்களைப் பெறும்படி அருளுகின்றாள். அதே நேரத்தில் அத்திரி முனிவரும் திரும்பி வருகின்றார். முனிவரும் அவரது மனைவியும் வேண்ட மும்மூர்த்திகளும் இணைந்து ஒரே உருவத்தில் இங்கே தங்கி விடுகின்றனர். கலைமகளும், திருமகளும், மலைமகளும் தவக்கோலத்திலே நிற்கும் காட்சியை ஆலய வாயிலின் உயரே நாம் காணலாம்.

இந்திரன் இங்கு வந்து புனிதமடைந்ததால் இவ்வூர் சுசீந்திரம் என்ற பெயரைப் பெற்றது என்பர். சுசி என்றால்புனிதம் என்பது பொருள். அகல்யாவிடம் தவறாக நடந்து கொண்ட பாவத்திற்காக ஞானாரண்யத்தில் இந்திரன் கடும் தவமியற்றி கடைசியில் சிவ



சுசீந்திரம் ஆலயத்தின் அழகிய தோற்றம்

பெருமான் அவன் முன்னிலையில் தோன்றிப் பாப விமோசனம் அளித்து தினமும் சுசீந்திரம் வந்து இரவு பூஜை நடத்த வேண்டும் என்ற கட்டளையும் இட்டுச் சென்றார் என்ற ஒரு கதையும் உள்ளது. இங்கு அர்த்த ஜாம பூஜை இன்றும் இந்திரனால் நடத்தப்படுகின்றது என்பது ஐதீகம். இக்கோவிலில் மாலை பூஜை செய்தவர் அடுத்த நாள் காலை பூஜை செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. உள்ளே எதுவும் மாறுதல்கள் கண்டால் அவற்றை பிற ரிடம் வெளியிடக் கூடாது. ''அகம் கண்டதைப் புறங்கூறாதே'' என்பது அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய நியதி.

சுசீந்திரத்தை அடுத்துள்ளது கோட்டாறு. தாலமியும், பிளினியும் புகழ்ந்துரைத்த பழம் பெரும் நகர். இன்றுகோட்டாறு நாகர்கோவில் நகரத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. கோட்டாறு என்று பெயர் அங்கு ஓடுகின்ற ஆற்றின் தொடர்பால் எழுந்தது என்பர். ''இதனை சுற்றியோடும்கோட்டாற்றுக்குவடக்கு .....'' என வரும் அகஸ்தீஸ்புரம் பாறைக்கல் வெட்டுத் தொடர் உறுதிப்படுத்துகின்றது. இந்த நதியின் தோற்றம் இந்திரன் தவத் தோடு தொடர்பு கொண்டது.

ஞானாரண்யத்தில் தவமியற்ற வந்த இந்திரன் அங்கு தண்ணீர் இல்லாத காரணத் தால் தமது ஐராவதம் என்ற யானையை அழைத்து ஆறு ஒன்றை உற்பத்தியாக்கும்படி பணித்தான். அந்த தெய்வீக யானை தனது கொம்பினால் மலய பர்வதத்தில் நீர்வரும் படியாகச் செய்ய, அந்நீர் ஞானாரண்யம் வழி யாகப் பாய்ந்தோடியது. இந்நிகழ்ச்சியின் காரணமாக இந்த நதியை வடமொழியில் தந்த நதி என்றும் தமிழில் கோட்டாறு என்றும் அழைத்தனர். (கோடு— ஆறு— கோட்டாறு) இப்புராணச் செய்தியை திருஞானசம்பந்தர் தமது திருக்கோட்டாற்றுப் பதிகத்திலே சுவை படக் கூறியுள்ளார்.

''நின்று மேய்ந்து நினைந்து மாகரி
நீரோடும் மலர் வேண்டி வான் மழை
குன்றின் நேர்ந்து குத்திப்பணி செய்யுங்
கோட்டாறு''

மேலும் இந்நிகழ்ச்சிகள் சுசீந்திரம் கோபுரத் திலே காணப்படும்சுவரோவியங்களில் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

அகஸ்தியரும், பரசுராமரும், பாண்டவர் களும் தாணுமாலயனை வணங்கியதாகக் கூறுவர். ஆதி சங்கரர் இந்த ஆலயத்திற்கு வருகை தந்தார் என்றும் சித்திரசபையில் இறை வனை நடனக் கோலத்திலே தரிசித்து மகிழ்ந் தார் என்றும் கூறப்படுகிறது. இறைவனைப் பற்றி அவர் இங்கே பாடிய 21 சுலோகங்களில் இரண்டு அடிகள் இங்குள்ள கொன்றையடி சந்நிதியில் தினமும் மாலை அபிஷேகத்திற்குப் பின்னர் பாடப்பட்டு வந்தது. திருஞான சம் பந்தரும் சுசீந்திரம் தாணுமாலயரை தமது தேவாரத்திலே போற்றிப் பாடுகின்றார்.

''சேணுலா மதில் வேணு மண்ணுளோர்

காணு மன்றலார் வேணு நற்புரத்


தாணுவின் கழல் பேணுகின்றவர்

ஆணியொத்தவரே''.

இது சம்பந்தர் வாக்கு. மேலும் மூலவரை அவர் ''தாணு வாய் நின்ற பரதத்துவன்'' என்று பாடுகின்றார். ''தாணுவைத்தமியேன் மறந்துய்வனோ'' என்பது அப்பரின் கூற்று.

சுசீந்திரம் ஸ்தல புராணம் கன்னியாகுமரி ஸ்தல புராணத்தோடு தொடர்பு கொண்டது. பாணாசுரன் மூவுலகும் நடுங்கும் வண்ணம் கொடுமை புரிந்து வந்தான். அதனால் தேவர்கள் இறைவனைத் துதித்து மூவுலகையும் காக்க வேண்டி நின்றனர். பாணாசுரன் ஒரு கன்னியால் அழிவான் என்று பிரம்மன் விதித்திருந்ததால் இறைவனது சக்தியாம் தேவி கன்னி வடிவில் இப்பூவுலகை வந்தடைந்தாள். சுசீந்திரத்தில் குடிகொண்டிருந்த தாணுமாலயனை மணக்க தேவி கன்னியாகுமரி விருப்பங் கொண்டாள். நள்ளிரவில் திருமணநேரம் நிச்சயிக்கப்பட்டது. குறிப்பிட்டநாளில் தாணுமாலயன் கன்னியாகுமரி புறப்பட்டார். இந்தத் திருமணம் நடைபெற்றால் பாணாசுரனை அழிப்பது இயலாது என்று உணர்ந்த நாரதர் திருமணத்தை நிறுத்த எண்ணி சேவல் உருவெடுத்து வழியிலேயே நின்று கூவினார். குறிப்பிட்ட நேரம் தவறிவிட்டது என்று எண்ணிய தாணுமாலயன் சுசீந்திரம் திரும்பினார். திருமணம் தடைபட்டதால் தேவி கன்னியாகவே இருந்து பாணாசுரனை வதம் செய்து மூவுலகையும் காத்து அருளினார். இன்றும் தேவி கன்னியாகுமரி இறைவனை நோக்கி தவக் கோலத்திலே நின்று நம்மையெல்லாம் காத்து அருள் புரிகின்றார். சுசீந்திரம் ஆலயத்தில் தாணுமாலயனுக்குச் செய்யும் அபிஷேகத் தீர்த்தம் பூமியின் அடியிலே சென்று கன்னியாக்குமரி கடலில் சென்று கலப்பதாக ஐதீகம். இவ்வாறு கடலில் கலக்குமிடம் தாணுமாலயத் தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

ஐந்து மைல் தூரத்திற்கு கம்பீரமாகக் காட்சி தரும் இக்கோயிலின் கோபுரம் 135 அடி உயரமுள்ளது. கல்லிலே கலையழகைக் காட்டி நிற்கும் செண்பகராமன் மண்டபம், திருக்கலியாணம் நடைபெறும் ஊஞ்சல் மண்டபம், வேனிற்காலத்தில் மூலவர் இளைப்பாறும் வசந்த மண்டபம், திருவிழாக் காலங்களில் வாகனங்களை அழகுபடுத்தும் இடமான அலங்கார மண்டபம், பல தெய்வங்களின் திருவுருவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள சித்திரசபை, பன்னிரண்டு ராசிகளும், ஒன்பது கிரகங்களும் பொறிக்கப்பட்டுள்ள நவகிரக மண்டபம் இவை இக்கோயிலின் முக்கிய பகுதிகளாகும். வேறு ஆலயங்களில் நவகிரகங்கள் நின்ற கோலத்திலே காட்சி தருகின்றன. சுசீந்திரம் ஆலயத்தில் நவ



பதினெட்டடி உயர ஆஞ்சநேயர்

கிரகங்கள் தங்கள் வாகனங்களில் அமர்ந்து காட்சி தருவது ஒரு புதுமையாகும். மேலும் நவகிரகங்களும் பன்னிரண்டு ராசிகளும் புடைப்புச் சிற்பமாக மண்டபத்தின் மேலே இங்கே செதுக்கப்பட்டுள்ளன.

கொன்றையடி சந்நிதிதான் இந்த ஆலயத்தின் மிகவும் பழமையான பகுதியாக கருதப்படுகிறது. கொன்றை மரமே இக்கோவிலின் ஸ்தல விருட்சமாகும். இந்த கொன்றை மரத்திலே காணப்படும் மூன்று கிளைகளிலே தான் அனுசூயா மும்மூர்த்திகளையும், குழந்தைகளாக்கி தொட்டிலிலிட்டு தாலாட்டினார் என்று கூறப்படுகிறது. மும்மூர்த்திகள் அத்திரி முனிவருக்கும் அவரது மனைவி அனுசுயாவிற்கும் தரிசனம் அளித்துவிட்டு மறையும் போது கொன்றை மரத்தடியில் மூன்று லிங்கங்கள் எழும்பின என்றும் கூறுவர். அந்த மூன்று லிங்கங்களையும் கொன்றை மரத்தடியில் நாம் இன்றும் தரிசிக்கலாம். அபிஷேக நேரம் தவிர மற்ற நேரங்களில் இந்த மூன்று லிங்கங்களும் மூன்று முகங்களைக் கொண்ட அங்கியோடுதான் காட்சி தருகின்றன. அங்கு தமிழ்நாட்டு முறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன.

கொன்றையடியின் வடக்கில் தாணுமாலயர் சந்நிதியை நோக்கிமாக்காளை என்றழைக்கப்படும் நந்தியின் 12.5 அடி உயரமான


உருவம் காட்சியளிக்கிறது. சந்தாசாகிப் இங்கு படையெடுத்து வந்து கோயில் சிற்பங்களை சின்னாபின்னமாக்கினான் என்றும், மாக்காளை அவன் அளித்த வைக்கோலைத் தின்று சாணம் போட்டதாகவும், அதனால் அவன் சிலைகளை சேதப்படுத்துவதை நிறுத்தினான் என்றும் ஒரு கர்ண பரம்பரைக் கதையொன்று உண்டு.

கருவறையில் தாணுமாலயன் லிங்க வடிவில் காட்சி தருகிறார். அவரது திருவுருவம் 2.5 அடி உயரத்தில் 16 சந்திர பிறையுடன் படமெடுத்த பாம்பிணடியிலே காணப்படுகின்றது. அபிஷேக நேரம் தவிர மற்றைய நேரங்களில் மூலவர் அங்கியோடு காட்சி தருகிறார். இந்த சந்நிதி வடக்கிடம் என்று அழைக்கப்படுகிறது. கருவறையில் தெற்கே திருமால் சந்நிதி உள்ளது. இதைத் தெற்கிடம் என்று அழைக்கின்றனர். இங்கு ஏழரை அடி உயரங்கொண்ட திருமாலின் திருவுருவம் வெள்ளி அங்கியுடன் காட்சி தருகிறது. இங்கே காணப்படும் கல்வெட்டு திருமாலை 'திருவேங்கடத்து ஆழ்வார்' என்று குறிப்பிடுகின்றது. வடக்கிடத்திலும் தெற்கிடத்திலும் கேரள முறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன.

வெளிப் பிரகாரத்தின் தென்மேற்கே உள்ள பாறையில் காணப்படும் கைலாச நாதர் கோயில் வடக்கிடம், தெற்கிடம் இரண்டு கோயில்களுக்கும் முன்னர் தோன்றியதாகும். இக்கோயிலின் கட்டடக் கலையமைப்பே இதன் பழமையை எடுத்தியம்பி நிற்கின்றது. வாயிற் கதவு நீங்கலாக இக்கோயில் முழுவதும் கல்லால் ஆனது. இக்கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது. பாறையிலும் கோயில் சுவரிலும் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுக்கள் வட்டெழுத்தாகும்.

வெளிப்பிரகாரத்தின் வடக்கே அலங்கார மண்டபத்தின் அருகே கிழக்கு நோக்கி அறம் வளர்த்த அம்மன் சந்நிதி உள்ளது. தாணுமாலயனைத் தரிசிக்க தேரூரிலிருந்து ஒரு வேளாளப்பெண் தினமும் இங்கு வந்து தரிசனம் செய்தாள் என்றும், தன் பக்தியினால் இறைவனோடு இரண்டறக்கலந்தாள் என்றும் அந்நிகழ்ச்சியின் நினைவாக அவரது குடும்பத்தினரால் அம்மன் சந்நிதி எழுப்பப்பட்டது என்றும் ஒருகர்ண பரம்பரைக் கதை கூறுகின்றது. ஒவ்வொரு வருடமும் மாசி மகத்தன்று தாணுமாலயனுக்கும் அறம் வளர்த்த அம்மனுக்கும் ஊஞ்சல் மண்டபத்தில் திருக்கல்யாணஉத்சவம்நடைபெறுகின்றது. மேலும் சுசீந்திரம் ஆலயத்தில் முருகப்பெருமான், ராமபிரான், சனீஸ்வரன், ஜுரதேவர், சாஸ்தா, இந்திர விநாயகர் சந்நிதிகளும் உள்ளன. இங்கு கன்னடநாட்டிலுள்ள போற்றிகள் பூஜை செய்கின்றனர்.

சுசீந்திரம் ஆலயத்தை ஒரு கலைக்கூடமாகக் கருதலாம். பதினெட்டடி உயரத்தில் வணங்கிய நிலையில் நின்றருளும் அனுமனது



பெண்வடிவில் விநாயகர் (விக்கினேஸ்வரி)


சிலை அழகிலும் கம்பீரத்திலும் பாரத நாட்டிலேயே சிறந்து விளங்குகின்றது. ஒரே கல்லில் வடித்தெடுத்த இசைத் தூண்கள், பல இசைக் கருவிகளின் நாதங்களை எழுப்பி எல்லோரையும் வியப்பிலாழ்த்துகின்றன. கருட சந்நிதியில் உள்ள திருமலை நாயக்கனின் கற்சிலையிலே மூக்குத்துளை சிரசுவரை செல்கின்றது. காதிலுள்ள துவாரம் வழிச் செலுத்தும் கம்பி, மறுகாது வழியாக வரும்படியும் அது அமைக்கப்பட்டுள்ளது. இதைப்போன்று மிக நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்கள் பலவற்றை நாம் இங்கே காணலாம். விநாயகர் பெண் உருவில் விக்கினேஸ்வரியாகக் காட்சி தருவதும், தமது மனைவியை மடியிலே வைத்து நீலகண்ட விநாயகராக அமர்ந்திருப்பதும், பார்த்தசாரதி மும்மூர்த்தியாக நின்று கீதையை உபதேசிக்கும் காட்சியும் வேறு ஆலயங்களில் காண்பது அரிது. அங்கு காணப்படும் தீபலட்சுமிகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கோலங்களில் விதவிதமான தலையலங்காரங்களுடன் நிற்பது காணவேண்டிய காட்சியாகும்.

அங்குள்ள செண்பகராமன் மண்டபத்தில் இராமாயண மகாபாரதக் காட்சிகள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. ஒரு தூணில் வாலி சுக்ரீவ போர்க் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. வேறொரு தூணில் இராமன் வில்லுடன் காட்சி தருகிறார். இராமனின் அருகில் நின்று பார்த்தால் வாலியின் உருவத்தை நாம் காண

லாம். ஆனால் வாலியின் உருவத்தருகே நின்று பார்த்தால் இராமனின் உருவத்தை நாம் காண முடியாது. இராமன் வாலியை மறைந்திருந்து அம்பெய்தான் என்ற உண்மையை சிற்பி மிக அழகாக நமக்குப்படம் பிடித்துச் சித்தரித்துக் காட்டுகின்றார்.

இக்கோயில் ஒரு காலத்தில் நீதி மன்றமாகத் திகழ்ந்தது. தங்கள் புனிதத்தன்மையை நிலை நாட்ட கொதிக்கும் நெய்யில் கைமுக்கும் வழக்கம் இக்கோயிலில் இருந்து வந்திருக்கிறது. குற்றவாளியை கொதிக்கும் நெய்யில் கையை வைக்கச் செய்வார்கள். அது கையை ஒன்றும் செய்யவில்லையென்றால் அவர்களை நிரபராதிகள் என்று மரியாதைகள் செய்வார்கள். கைபொள்ளி விட்டால் அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவார்கள். இந்த வழக்கத்தை 19-ஆம் நூற்றாண்டில் திருவிதாங்கூரை ஆண்டு வந்த சுவாதி திருநாள் மகாராஜா நிறுத்தினார் என்ற வரலாறு கூறுகின்றது.

இக்கோயிலில் நூற்றுக்கு மேற்பட்ட கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் பழமையானது கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றியதாகும். முதலாவது பராந்தகச் சோழன் காலத்ததும் (கி.பி. 907-953) முதலாவது ராஜ ராஜன் காலத்ததுமான (கி.பி. 985-1013) பல கல்வெட்டுக்களை திருவிதாங்கூர் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் பதிப்பித்துள்ளனர். இவை இந்திய கல்வெட்டுத் தொகுப்பிலும் இடம் பெற்றுள்ளன. இராஜ ராஜ சோழன் காலத்திய கல்வெட்டு கி.பி. 999 ஆகஸ்டு மாதம் 29-ஆம் நாள் தோன்றியதாகும் என்று அறிஞர் கில்ஹார்ன் கணக்கிடுகிறார். இக்கல்வெட்டு சுசீந்திரத்தை ''நாஞ்சி நாட்டு திருச்சிவந்திரம்'' என்றும் குறிப்பிடுகின்றது. இராஜ ராஜனைத் தொடர்ந்து இராஜேந்திர சோழனும் இத்திருக்கோயிலுக்கு பணிகள் பல செய்தான். சோழர் ஆதிக்கத்திற்குப் பின்னர் சுசீந்திரம் பராந்தக பாண்டியன் கையிலும் அதனை அடுத்து வேணாட்டு மன்னர்கள் கையிலும் சென்றது. வேணாட்டு மன்னனான வீரகேரளன் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்து உள்ளான். அதனால் சுசீந்திரம் வீரகேரள சதுர்வேதி மங்கலம் என்ற பெயரைப் பெற்றது. விஜயநகரஅரசின் பிரதிநிதியான வித்தளனும் மதுரையை ஆண்டு வந்த திருமலை நாயக்கனும் கோயிலிலேசெய்த திருப்பணிகள் பல. இவ்வாறு பாண்டியர்களும் சோழர்களும் விஜய நகர நாயக்க வம்சத்தினர்களும் பின்னர் திருவிதாங்கூர் மன்னர்களும் தங்கள் கைவண்ணங்களை இக்கோயிலிலே அழகுறக் காட்டியுள்ளனர். இக்கோயிலில் திராவிடக் கட்டடக்கலை அமைப்பிலே சிறப்புடன் திகழ்கின்றது. இராஜேந்திரன் காலத்திய தமிழ்க் கல்வெட்டு ஒன்று பெருமாள் சந்நிதியின் மேற்குச் சுவரில் காணப்படுகின்றது. கோபுர வாயிலின் வடக்கே கிடைத்த ஒரு கல்வெட்டிலிருந்து 1545-ஆம் ஆண்டு விஜயநகர பேரரசின் தளபதி வித்தளனும், அவனது தம்பியும் கோபுரத்தைக் கட்டியதாகத் தெரிய வருகிறது.



ஒரேகல்லில் வடித்தெடுத்த இசைத்தூண்கள்

சுசீந்திரம் தாணுமாலயர் ஆலயம்நாஞ்சில் நாட்டவர்களால் மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. அங்கு மார்கழித் திருவிழாவின் போது நடைபெறும் தேரோட்டமும், சித்திரைத் திருவிழாவின் போது நடைபெறும் தெப்ப விழாவும் இம்மாவட்டத்திலேயே சிறப்பான திருவிழாக்களாகும். தாணுமாலயன் அருளைப் பெற இத்திருவிழாக்களுக்கு புதுமணத் தம்பதிகள் வருகை தர வேண்டும் என்ற நியதியை நாஞ்சில் நாட்டவர்கள் இன்றும் கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வாறு சுசீந்திரம் நாஞ்சில் நாட்டின் ஆன்மீக நகராகத் திகழ்கின்றது. இவ்வூரின் சிறப்பைக் கவிமணியவர்கள், ''தொன்னகரம் ஆன சுசீந்தை சிறப்பெல்லாம் என்னொரு நாவால் எடுத்துரைக்க ஏலாதே'' எனக் கூறிச் சென்றார்.

---

## கடவுளை அடையும் வழி

**குழந்தைக்கு இருக்கும் நம்பிக்கையும், களங்கமற்ற தன்மையும் இருந்தால் கடவுளை அடையலாம்**

—இராமகிருஷ்ண பரமஹம்சர்

# விளாம்பழ ஞானம்



**ஞானச்சேரி ஞானிகள்,** வேளச்சேரி ஆசிரமம்.

எங்கும் கடவுள் எதிலும் கடவுள் என்பது ஒரு புறமிருக்கட்டும். எதைப் பற்றியும்தெளிவு எதிலும் தெளிவு என்பதே ஞானம். இதை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பெறுகிறார்கள். இந்த நிலையை அடைய கடவுளுக்கு உயிரே வேண்டும். புரியும்படியாக சொன்னால்உயிரையும் உயிர்களையும் புரிந்து கொண்ட மனிதனுக்கே ஆண்டவன் ஞானத்தைத் தருகிறான்.

நிறம் இனம் இவைகளை மருந்துக்கும் அறியாத மனிதனே மனிதன். இத்தகைய மனிதனே ஆண்டவனை வழிபடத் தவறுவதில்லை. எடுத்த பிறவியிலேயே ஞானத்தைப் பெற்று விடுகிறான்.

ஞானம் என்பது புரிந்து கொள்ள மிகவும் எளிதானது. அதை விளங்கிக் கொள்ள முடியாதபடி ஆக்கிக் கொண்டவன் மனிதனே. ஆண்டவனல்ல. அவன் அதை நமக்கும் அருளும் பேரருளாளன். இதுவே உலக சமயம். இறைவனின் மதம் என்பதை அறியுங்கள்.

மரத்தில் விளையும் காயும் கனியும் கண்களுக்குத் தெரிந்தே மரத்தில் தொங்குகிறது. இவ்வகையில் விளாமரத்தில் காய்க்கின்ற விளாங்காயும் விளாங்கனியும் கண்களுக்குத் தெரிந்ததே. விளங்காத காயா விளங்காய்? விளங்காத கனியா விளாங்கனி? இல்லையில்லை நமக்கு விளங்குகின்ற காயே, விளங்குகின்ற கனியே விளாங்கனி.

உறுதியான விளாம்பழ ஓட்டினுள் காயும் கனியும்உண்டு. உறுதியான ஓடு காய்ப்பகுதியையும் கனிப் பகுதியையும் மறைக்கவில்லை. பாதுகாக்கிறது... என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இது போல இறைவனை அறிய முடியாமல் நமது சிந்தனைக்கும் மனதிற்கும் தடை விதிப்பது வேறு யாருமல்ல. நமது உடலே.

நமது உடலே இறைவனுக்கும் நமக்கும் இடையிலே உள்ள பெரிய தடை. அதுவே ஞானத்திற்கும் இறைவனுக்கும் பெரிய பாதுகாப்பு. உடல் ஞானத்திற்கு பாதுகாப்பு என்று அறிந்தால உயிரும் உடலும் இறைவனுக்கே என்று மனிதன் அறிவான். பிறகு எல்லாப் பொருளிலும் கடவுளைப் பார்ப்பான். ஞானம் என்ற தெளிவைப் பெறுவான்.

கடவுளையும் ஞானத்தையும் அடைய எண்ணுபவர்கள் உடலை நேசிக்கக் கூடாது. காக்க வேண்டும். இதுவே சிவனிடமிருந்து ஞானத்தைப் பெறும் வழி. உடலை நேசிக்கின்றவர்களுக்கே கடவுளை நேசிக்க முடியாது. பக்தி செய்யத் துன்பப்படுவார்கள். உடல் நேசிப்பு என்ற தேக அபிமானம் விளாங்காயைப் போன்றது.

உயிருக்கு உயிராய் இருக்கின்ற ஆண்டவன் மனித உடலை வைத்தே ஞான பரிணாம வளர்ச்சியைக் காண்கின்றான். அந்த ஆண்டவனை நமது தேக அபிமானத்தால் தடை செய்யலாமா? செய்யக் கூடாது. உடலோடும் உடற்கூறுகளோடும் உடலுறுப்புக்களோடும், ஞானம் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

விளாங்காய் காயாக இருக்கும்பொழுது அதைப் பறித்துத் தின்ன முடியாது. விளாங்காயை உடைப்பது கடினம். அப்படியே உடைத்தாலும் காய்வாட்டான சதைப்பகுதி ஓட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். உண்ண முடியாது. உட்பகுதி கசக்கும்.

இதுபோல இன்று மக்கள் உடல் நேசிப்பினால், ஆண்டவனால் அருள இருக்கின்ற ஞானத்தைப் பெற முடியாமல் இருந்தும் இழந்து நிற்கிறார்கள்.

ஞானம் என்றால் அது நமக்கு வராது. பெறுவது மிகமிகத் துன்பம் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தெரிந்து கொண்டு ஞானமூர்த்தியான சிவபெருமானை நேசிக்க முற்படுங்கள். உடலபிமானத்தை விட்டுவிடுங்கள். சமுதாயத் தொண்டு செய்யவும் இறைத்தொண்டு புரியவும் உடலைக் காப்பாற்றுங்கள். பிற மக்களையும் காப்பாற்றி ஞானத்திற்காக இறைவனிடம் இட்டுச் செல்லுங்கள். இதுவே ஞானமென்ற விளாங்காயின் விளக்கம்.

விளங்கும் காய் தான் விளாங்காய். விளங்காத காயல்ல அது. இது போல மனித உடல், கடவுள், ஞானம் அனைத்தும் அனைவருக்கும் எளிது. மரத்தில் விளாங்காய்கள் தொங்கிக் கொண்டிருக்கும். கல்லால் அடித்தாலும்கூட காய்கள் கீழே விழாது. இந்த உதாரணத்தை மனதினுள் வையுங்கள்.

இது போல தேக அபிமானம் உள்ளவரை ஞானத்தைப் பெற முடியாது. கடவுளை இரு கண்களால் பார்க்கவும் முடியாது. ஆயினும் மனிதன் இக்கருத்தை அறிந்து மனம் தளருதல் கூடாது. எதையும் அருளுகின்ற இறைவன்,



**ஞானச்சேரி சுவாமிகள்,** வேளச்சேரி ஆசிரமம்

விளாம்பழம். விளாங்காயல்ல. மனிதனே விளாங்காய். விளாங்காயும் விளாம்பழமும் சிறிது இடைவெளியுள்ள ஒரு பரிணாம வளர்ச்சியே.

ஒரு விளாமரத்தில் காயும் கனியும் அடுத்தடுத்து வருகின்ற ஒரு உண்மை. இது ஒரு பொய்யல்ல என்பதை உணருங்கள்.

நம்மைக் காக்கின்ற ஆண்டவனிடம் ஞானம் உள்ளது. அது அவனுக்கு எதற்கு? அதனால்சிவபெருமானிடத்தில் ஞானம் தங்காது. அது அவனை வணங்கும் நம்மிடமே வரும். நாம் அவனை நினையாதவரை அல்லது தேக அபிமானம் கொண்டுள்ளவரை இறைவன் ஞானம் தன்னுடையது என்று சொல்லுவதில்லை. உன்னுடையது என்று சொல்லி விளாம்பழம் ஓட்டினுள் ஒட்டாமல் இருப்பதை போன்று அது அவனிடம் தனியாக உள்ளது. பாதுகாப்பாகவும் உள்ளது. அந்த விளாம்பழத்தை நாம் பெற வேண்டும்.

உடல் நேசம் என்ற உணர்வை வெட்டி உடலை இறைவனுக்காக பாதுகாத்து அவனிடம் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கின்ற விளாம்பழ ஞானத்தைப். பெறுங்கள்.

குடும்பத்தை விட்டு ஓடு,. மனைவி, மக்கள், காசு...இவற்றைத் துற; பிறகு இறைவனை நினை. பக்தியும் ஞானமும் வரும். உலகில் மிகப் பெரிய மனிதனாவாய்......என்று கடவுள் சொல்லுவதில்லை. கடவுளின் இக்கருத்து மிகமிக உறுதியானது. இந்த உறுதி விளாம்பழத்தின் ஓட்டைப் போன்று உள்ளது.

கடவுளை விரும்பி ஞானம் வந்த பின் மனிதன் இதை அறிந்து விடுகிறான். இதன் பயன் என்ன தெரியுமா? கவலைகள் நீங்கி விடும். இன்றைய மனிதனுக்குத் தேவைப் படுவது இதுவே. ஆகவே நாட்டிலுள்ள ஆண்களும் பெண்களும் கடவுளின் உறுதியான எண்ணத்தை உணரவேண்டும். விளாம்பழ ஓட்டை உடைத்தான் மனிதன். உள்ளேயுள்ள விளாம்பழத்தைத் தின்றான். இது போல முதலிலோ இடையிலோ அல்லது கடைசியிலோ கடவுளின் உருவத்தை வைத்து கடவுள் வழிபாட்டைச் செய். ஆண்டவனிடம் இருக்கின்ற தெளிவு ஞானமாக மனிதனுக்குக் கிடைத்துவிடும்.

விளாங்கனியை உண்ண மனிதன் மேலோட்டை உடைத்தே தீரவேண்டும். அது போல கடவுளை உடைத்தே ஞானம் பெற வேண்டும். கடவுளை உடைக்கலாம். உருவத்தை நீக்குஎன்று எளியவன் அருளிய கருத்தை மனதினால் அறியுங்கள். மேன்மை கிடைக்கும். தன்னையே படைத்துக் கொண்டு ஆக்கிக் கொண்டு தன்னையே அருளச் செய்து கொண்டு. பின்பு தன்னையே அழித்துக் கொண்டு விடுகின்ற பெருமை யாருக்கு கிடைக்கும்? இது இறைவனிடமே இருக்கும்.

மனம் வைத்துப் படிக்கும்போது இதை அறியுங்கள். அரிசிஉணவாக சமைக்கப்படுகிறது. இது போல இறைவனை உணருகின்றவன் மனிதனே. சமைத்த உணவை உண்டபின் உயிர்கள் காக்கப்படுகின்றன. இது போல சமுதாய மக்களுக்கு இறைவன் உதவுவதை கவனியுங்கள். ஞானம் உங்களுக்கு வந்தபின் கடவுள் விளாம்பழத்தை விட்டு விலகி ஓடு போன்று விடுபட்டுப் பிறகு பல செயல்களுக்கு பயன்படுகிறான்.

சமுதாய வளர்ச்சிக்கே கடவுள். உரம் பூமிக்கே. அதைக் கொண்டு வளர்ந்த உதிர்ந்த தானியங்கள் நமக்கு. உணவு ஜீரணமான பின் மலமாகும். மலம் மண்ணுக்கு உரம். இது போல கடவுள், ஞானம், விளாங்காய், கனி, உடைந்த ஓடு. என்ற சிந்தனையுடன் ஓடு. வீட்டிலே நாடா? நாட்டிலே வீடா என்பது புரியும்.

ஓம்

ஞானச்சேரி ஞானிகள்.

## குருமூர்த்தி துதி

டாக்டர் சிவப் பிரியா.

ஆலமர் அழகனே ஆகம மொழியனே
அனைத்தும் கடந்த அறிவேசுவரனே
வேத முதல்வனே வீணைக்கரத்தனே
நீதி நியாயனே தட்சிணாமூர்த்தி
முற்றறிவாளனே மாணிக்கவாசகர் குருவே
மௌன நாதனேஓங்கார மூர்த்தி
புத்தீசுவரனே புண்ணிய வடிவே
சித்தீசுவரனேசின்மய மூர்த்தி
ஆணவ கர்ம மாயை அகற்றி
அருளொளி ஏற்றி சுத்தமாக்கும்
அருள்கலைவாணனே அரியயன் நாதனே
அணிமேனியனே போற்றி போற்றி
அறவாழி அந்தணனே ஆகமச் செல்வனே
பிறவிப் பிணி போக்கும் பேரறிவாளனே
மும்மூர்த்தி வழிபடும் முழுமுதல் சிவனே
செம்மை சித்தாந்தனே போற்றி போற்றி.



# விபூதி, திருமண்ணின் மகிமை

**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்**

''விறகுக்கட்டையை அக்னியானது பஸ்ப மாக்குவது போல், ஞானம் என்கிற அக்னி எல்லாக் கருமங்களையும் பஸ்பமாக்குகிறது'' என்று பகவத்கீதையில் கிருஷ்ணன் அர்ச்சுன னுக்கு உபதேசிக்கிறார். பஸ்மமாகிய விபூதி, இவ்விதம் கர்மங்களை எரித்த பின் நிற்கும் ஞானத்துக்கே அடையாளமாகும்.

'விபூதி பூதிரைச்வர்யம்' என்று 'அமர கோச''த்தில் உள்ளது. அதாவது, விபூதி என்பதும், ஐச்வர்யம்என்பதும் ஒரே பொருள் தரும்.

எந்தப் பொருளையும் தீயிலிட்டால் முதலில் அது கறுப்பாக ஆகும். பிறகு இன்னும் அக்னி புடம் போட்டால் நீற்றுப் போகும். சுத்த வெளுப்பாக ஆகிவிடும். அப்புறம் தீயில் போட் டால் அது மாறாது. அதுவே முடிவான நிலை. இப்படி நீற்றுப்போனதே திருநீறு. நீறு பஸ்மம் எனப்படும். ஈசுவரன் மஹாபஸ்மம். எல்லாம் அழிந்த பின்னும் இவற்றை அழித்து விட்டு எஞ்சி நிற்கிற, அழியாத சத்யமான மஹா பஸ்மம் அவன். பஸ்மமாக நீற்று வெளுத்துப் போனதற்கு முந்திய மாறுதல் கறுப்பு. அது தான் கரி. நிலக்கரிதான் இவ்வுலக ஐச்வர்யத் தில் இக்காலத்தில் முதலிடம் பெற்றுள்ளது. ரொம்பவும் விலை மதிப்பான வைரமும் அது தான். இந்தக் கரியாக மாறிய பொருளைவிட, மிகவும் உயர்ந்தது. நீற்றுப் போனதிருநீற்றுக்கு மேலான பொருளே கிடையாது.

பல வர்ணங்களைக் கொண்ட பொருள் களைக் காண்கிறோம். ஆனால், இந்த வர்ணங் களெல்லாம் வஸ்துவை எரித்தபின் மாறிவிடு கின்றன. எல்லாம் கடைசியில் வெளுத்துப் போய்விடும். நாம் 'சாயம் வெளுத்துப் போய் விட்டது' என்கிறோம். சாயம் என்பது வேஷம். வேஷம் போனபின் இருப்பதே மெய். 'மெய் யான ஆத்மாவின் தூய்மைக்குப் பெரிய அடை யாளமாக இருப்பது விபூதிதான். இதை இந்தப் பொய்யான மெய் (தேகம்) முழுவதி லும் பூசிக் கொள்ள வேண்டும். எல்லாம் எரிந்தபின் எஞ்சிநிற்பது விபூதியின் வெண்மை ஒன்றுதான். மற்ற சாயமெல்லாம் பொய்; வெண்மையே உண்மை.

ஞானம் என்னும் தீ மூண்டபின், காரி யங்கள் எல்லாப்பஸ்மமாகிவிடும் என்று ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உபதேசித்ததில், 'பஸ்ம மாகிவிடும் என்றால் எல்லாம் அழிந்து, புத்தர் சொன்ன மாதிரி சூனியமாகிவிடும் என்று அர்த்தமல்ல. விறகுக் கட்டைகள் தீயில் எரிந்து போன பின் எல்லாமே சூனியமாகிவிட வில்லை; அப்போது எஞ்சி நிற்பது நீறு. அவ் வாறே ஞானம் என்னும் தீயில் கர்மாக்கள் யாவும் எரிந்து போன பின்னும் ஆதாரமான ஒன்று எஞ்சி நிற்கும்; மிகுந்து நிற்பதே 'மகா பஸ்ம' மான பரமாத்மா.

திருத்தொண்டத் தொகையில் சுந்தர மூர்த்தி நாயனார் ''முழுநீறு பூசிய முனிவர்க் கும் அடியேன்'' என்று பாடினார்.

விபூதியை தேகம் முழுவதும் பூசிக்கொள்ள வேண்டும். விபூதியைத் தரித்துக் கொள்வதி னால் ஸகல ஐச்வர்யங்களையும் அடையலாம். பெரும்பாலான மக்கள் விபூதியை அணிகிறார் கள். திருநீறு என்பதே சாதாரண மக்களால் துன்னூறு எனப்படுகிறது. கோயிலுக்குப் போனாலும், ஏதாவது பீடாபரிகாரமாக வேண்டுமானாலும் ''துன்னூறு கொடுங்கள்'' என்று மக்கள்கேட்பதை நாம் சகஜமாக பார்க் கிறோம். பூத, பிரேத, பைசாச சேஷ்டை களிலிருந்து காப்பாற்றும் பெரிய ரட்சையாக இருப்பது விபூதியே.

வைஷ்ணவர் திருமண் இடுவார்கள். துளசிச் செடியின் அடியில் உள்ள மண்ணை இட்டுக் கொள்வது வழக்கம்.

மண்ணை இட்டுக் கொள்வதும், திரு நீற்றை இட்டுக் கொள்வதும் நமக்கு உயர்ந்த தத்துவத்தையே விளக்குகின்றன. மன்னனும் மாசறக் கற்றோனும் பிடி சாம்பலாகி விடு கிறார்கள். நாம் கடைசியில் சாம்பலாகத் தான் போகிறோம். இந்த வாழ்க்கை மாய மானது என்பதை விபூதி உணர்த்துகிறது. மண்ணிலே பிறந்த நாம் மண்ணிலேதான்மடிய போகிறோம். மண்ணிலே பிறந்த மரம் கடைசி யில்மட்கிஅதே மண்ணோடு மண்ணாகத்தானே ஆகிறது? நம்மை முடிவில் அடக்கிக் கொள்ளப் போகிற தத்துவம் அதுதான். இதை ஞாபகப் படுத்திக் கொள்ளவே, நம்மில் சிலர் திருமண் அணிகிறோம்.

நன்றி : தெய்வத்தின் குரல்
முதற்பகுதி.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் ·த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயன் அடைவீர்!

## ஆணையாளர் சுற்றறிக்கை

அனுப்புநர்
திருமிகு சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.
ஆணையாளர்,
இந்து சமய அறநிலையத் துறை
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை-34

பெறுநர்
அனைத்து இணை ஆணையர்/
நிர்வாக அதிகாரிகள்
அனைத்து துணை ஆணையர்/
செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்/
செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்/
துணை ஆணையர்.

ந.க. எண். 11834/89சி4 நாள் 21-6-91

ஐயா

பொருள் : இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை— திருக்கோயில் திங்கள் இதழ் திங்கள் தோறும் பொலிவுடன் வெளிவருவது—திருக்கோயில்களில் விளம்பரங்கள் பெறுவது விளம்பரக் கட்டணம் நிர்ணயம் செய்தல்— தொடர்பாக.

பார்வை: அரசு ஆணை எண். நிலை 242/வ.வ. & அ.நி. துறை நாள் 3— 5— 91.

பார்வைக் குறிப்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் தெய்வீக மாத இதழான திருக்கோயில் திங்கள் இதழுக்கு விளம்பரங்கள் பெறுவது தொடர்பாக கீழ்க்கண்டவாறு விளம்பரக் கட்டணம் நிர்ணயம் செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

| பக்க விபரம் | விளம்பரத் தொகை |
|---|---|
| மேல் அட்டையின் உள்பக்கம் (இரண்டாம் அட்டை) | ரூ. 750 (ரூ. எழுநூற்று ஐம்பது மட்டும்) |
| மேல் அட்டையின் கடைசி உள்பக்கம் (மூன்றாம் அட்டை) | ரூ. 500 (ரூ. ஐந்நூறு மட்டும்) |
| உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 450 (ரூ. நானூற்று ஐம்பது மட்டும்) |
| உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 300 (ரூ. முன்னூறு மட்டும்) |

மேலே குறிப்பிட்டுள்ள விபரப்படி, திருக்கோயில் திங்கள் இதழில் திருக்கோயில் நிர்வாகிகளைத் திருக்கோயில்களில் நடைபெறும் முக்கிய திருவிழாக்கள், சிறப்பு வழிபாடுகள், பூஜைக் கட்டளைகள் மற்றும் குடமுழுக்கு விழாக்கள், மாதாந்திர மற்றும் வருடாந்திர திருவிழா, நாள்காட்டி ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடவும், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்கள் தங்கள் நிர்வாகத்தில் உள்ள முக்கிய திருக்கோயில்களிலிருந்து மேற்கண்ட விவரப்படியான விளம்பரங்களைத் திருக்கோயில் திங்கள் இதழுக்கு அனுப்பிடவும் தகுந்த நடவடிக்கையை உடன் எடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திருக்கோயில் திங்கள் இதழுக்கான விளம்பரங்களைத் தெளிவாகத் தட்டச்சு செய்து இருபடிகளில்அனுப்பவும், விளம்பரக் கட்டணத்தை ஆணையரின் பதவிப் பெயருக்குக் கேட்புக் காசோலை (Demand Draft) எடுத்து அனுப்பவும், விளம்பரங்களை அனுப்பும் உறையின் மீது "திருக்கோயில் திங்கள் இதழ் விளம்பரம்" என எழுதி அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. விளம்பரங்களை வெளியிட குறைந்தது 15 தினங்களுக்கு முன்கூட்டி விவரங்களை அனுப்பி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து துணை ஆணையர்/உதவி ஆணையர்கள் தங்கள் சரகத்தில் உள்ள அனைத்துத் திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் மேற்படி விபரங்களை சுற்றறிக்கை மூலம் தெரிவித்து விளம்பரங்களை அனுப்பி துரித நடவடிக்கை எடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம். ஆணையாளர்

# அருள்மிகு
# அரங்கநாதர் திருக்கோயில்
## ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்.

## "வைகுண்ட ஏகாதசி பெருவிழா"
## 7-12-91 முதல் 27-12-91 வரை

**முக்கிய திருநாட்கள் விபரம்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருநெடுந்தாண்டகம் | ... | 6-12-91 | இரவு | 7.00 | மணி |
| பகல்பத்து ஆரம்பம் | ... | 7-12-91 | காலை | 7.45 | மணி |
| மோகினி அலங்காரம் | ... | 16-12-91 | காலை | 6.00 | மணி |
| வைகுண்ட ஏகாதசி புறப்பாடு | ... | 17-12-91 | காலை | 4.30 | மணி |
| பரமபத வாசல் திறப்பு | ... | 17-12-91 | காலை | 5.45 | மணி |
| திருக்கைத்தல சேவை | ... | 23-12-91 | மாலை | 6.00 | மணி |
| வேடுபறி | ... | 24-12-91 | மாலை | 5.30 | மணி |
| ஆழ்வார் மோட்சம் | ... | 27-12-91 | காலை | 6.00 | மணி |

**மோகினி அலங்காரம்**

16—12—1991 சேவை நேரம் காலை 6.00 மணி முதல்
மாலை 4.30 மணி முடிய

**வைகுண்ட ஏகாதசி** நம்பெருமாள் புறப்பாடு காலை 4.30 மணி
17—12—1991 பரமபதவாசல் திறப்பு காலை 5.45 மணி

மூலவர் சேவை நேரம் (முத்தங்கி) காலை 7.30 மணி முதல்
மதியம் 12.30 மணி முடிய
மாலை 2.00 மணி முதல்
இரவு 7.00 மணி முடிய

திருமாமணி மண்டபத்தில் நம் பெருமாள்சேவை நேரம்
(ரத்னங்கி சேவை) காலை 10.15 மணி முதல்
மாலை 8.00 மணி வரை
இரவு 10.30 மணி முதல்
இரவு 11.00 மணி முடிய

மூலவர் முத்தங்கி சேவை நாட்கள்: 17-12-91 முதல் 22-12-91 முடிய மற்றும்
23-12-91 காலை 10.00 மணி முடிய

சிறப்பு மிக்க வைகுண்ட ஏகாதசி திருவிழாவிற்கு, பக்தர்கள் அனைவரும் பெருந்திரளாக வந்திருந்து நம்பெருமாளை சேவித்து, பெருமாளின் திருவருளுக்கு பாத்திரராகும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ப. தனபால், எம் ஏ., பி.எல்.,**
துணை ஆணையர்/செயல் அலுவலர்